அமிர்தவசனி

தெய்வீக மாதப் பத்திரிகை

Page. No. 573.

மலர் 4
இதழ் 12
விலை அ. 4

நந்தன ஹு பங்குனி மீ
மார்ச்—ஏப்ரல்—1953

வருட சந்தா
ரு. 2-4-0

ACC. No. 18581

வேள்வியினின்று வெளியான மான் மழுவாதிய
ஏந்தி முயலகனை ஊன்றி நிற்கும் உக்ரசிவம்
(கந்தபுராணச் சித்திர விளக்கம்—45)

பொருளடக்கம்

			பக்கம்
1. பெயரும் புகழும்	(திருப்புகழ்மணி)	...	529
2. ஆத்ம போதம்	(திரு. நா. பி, திரு. கி. சு.)	...	532
3. கதிர்காம யாத்திரை	(கி. வா. ஜகந்நாதன்)	...	537
4. அதிசயம் அநேகமுற்ற பழநி	(திருப்புகழ் சதுரர். சே. த. இராமலிங்கம் பிள்ளை)	...	543
5. கொற்கை முத்து	(ஆர். பி. சேதுப்பிள்ளை)	...	547
6. கீதையின் சாரம்	(கே. எஸ். சுந்தரமூர்த்தி.)	...	551
7. பராசலதம்பதிகள்	(ரசபதி)	...	556
8. உள்ளத் தூய்மை	(அ. ராமமூர்த்தி)	...	566
9, கடவுளைக் காணமுடியுமா	(வா. ராமலிங்கம் பிள்ளை, பேட்டை)	...	569
10. மதிப்புரை	(பெரும்பெயர் முருகன்)	...	573
11. ஷை திருப்புகழ் உரை		...	574
12. LIFE STORMS.	(*Thiruppugal mani.*)	...	575

'அமிர்தவசனி' சந்தா அறிக்கை

சித்திரைமீ முதல் பங்குனிமீ முடிய வருட சந்தா உள்நாட்டிற்கு இலங்கை உள்பட, ரூ. 2—4—0. நான்கு வருட சந்தா ரூ. 8—4—0 அயல்நாடுகளுக்கு வருட சந்தா ரூ. 3—0—0. நான்கு வருட சந்தா ரூ. 11—0—0.

பத்திரிகையை வி.பி.யில் அனுப்புகிறதில்லை. சந்தாவை சித்திரை மாதத்திற்கு முன்னதாகவே அனுப்பி வைக்கவும்.

அமிர்தவசனி, 54, பந்தர் தெரு, சென்னை.

For **PAPERS** INDIAN & FOREIGN

NEWSPRINT — CREAMLAID — PRINTING BOND — TISSUE — BUTTER — POSTER — ART KRAFT — BOARDS, ETC., ETC.,

Deccan Blue Match, Tea wrapper & Duplicating paper available any quantity

P. S. N. M. Ramalingam Chettiar & Co.

46, ANDERSON STREET, MADRAS-1

PHONE: 55004 · POST BOX 1563 · GRAMS: "DRAWING"

அமிர்தவசனி

தெய்வீக மாதப்பத்திரிகை

ஆசிரியர்: சு. முத்துஸ்வாமி

எல்லோரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறென் றறியேன் பராபரமே

மலர் 4	நந்தன ௵ பங்குனி ௴ மார்ச்—ஏப்ரல்—1953	இதழ் 12

பெயரும் புகழும்

(திருப்புகழ்மணி)

கெடுவாய் மனனே கதிகேள் கரவா
திடுவாய் வடிவேல் இறைதாள் நினைவாய்
சுடுவாய் நெடுவேதனை தூள்படவே
விடுவாய் விடுவாய் வினையாவையுமே.

என்று அருணகிரி வள்ளல் உபதேசித்தார். கபடத்தை ஒழித்து மெய்யன்பினுல் முருகன் தாளை நாடு என்ருர். ஆசைகளாகிய வினைகளை விட்டொழி என்ருர். மண், பெண், பொன் முதலியவைகளை நாடும் மனம், தான் உயிருடன் வாழும் வரையில் மட்டுமன்றி, உயிர் பிரிந்த பின்னர் தன்னைப் பிறர் நினைக்கவும் போற்றவும் கொண்டாடவும் வேண்

அன்றுமுத லின்றளவு மாக்கையோடு சூட்சியுமாய்
நின்ற நிலையறிய நேசமுற்ருய் நெஞ்சமே.

டுமே யென்ற கவலையுறுதல் மிகவும் வியப்பான காரியம்

கண்ணெதிரில் பெருமக்களும் சிறுமக்களும் பல உயிர்களும் தனமும் மற்றுமெல்லாம் காலம் எனும் பெரு வெள்ளத்தில் அழியக் கண்டும், அவைகளின் ஞாபகம் அறவே மறையக் கண்டும், உண்மையை உணர்ந்தான் அல்லன் மானிடன். தன் ஞாபகம் மறவாதிருக்க, உருப்படங்கள் எழுதியும், உரு ஆக்கங்கள் நிலை நிறுத்தியும், வில் (Will) மூலமாய் தன் பேர் நிலையுற்றிருக்க அநேக ஸ்தாபனங்கள் நிறுவியும், சமாதிகள் ஏற்பாடு செய்தும் துன்புறுகின்றான். காலம் எனும் கொடும் வெள்ளம் இவைகளை யெல்லாம் அழித்தே செல்லுகின்றதை உற்று முன் பின்னோக்கிப் பார்த்தால் யாவரும் அறிவார்.

இன்றைக் கிருந்து நாளை மறையும் பெயரின் தன்மை இப்படி யிருக்க, புகழுக்காக எவ்வளவு பொறாமை, துக்கம், கலக்கம், துன்பம் உலகத்தில் காணப்படுகின்றன. ஆகவே, 'எல்லாமற என்னை இழந்த நலம் சொல்லாய் முருகா' என்று பாடினார். பக்தியில் ஈடுபட்டு அன்புறும் தொண்டர்கள் நிலையை அப்பர் ஸ்வாமிகள் உபதேசிக்கும்பொழுது, "தன்னை மறந்தாள், தன்நாமம் கெட்டாள் தலைப் பட்டாள் தலைவன் தாளே" என்றார். பேரும், பேரின் பெருமையும் ஈசன் விலாசமே என்று

அங்கங் குணர்வா யறிவாகி யேநிரம்பி
எங்கெங்கு மானதிலே பேசரித்தாய் நெஞ்சமே

அப்பர் பாடியதும் காண்க. "பேராகி பேருக்கோர் பெருமையாகி...............சென்றடிகள் நின்றவாறே." தன்னை மறந்த நிலையை குறிப்பாய்க் கொண்ட பக்தர்களுக்கு, தன் பின் தன் பேர் நிலைத்திருக்க நாடும் கருத்துதான் வருமோ? சித்தர்கள் வற்புறுத்துகிறார்கள், "தன்னை மறந்து தலைவாசல் தாள் போட்டு, உன்னை நினைந்து உறங்குவது எக்காலம்;" "தன்னை மறந்து தலைத்த நிலைமறந்து, கன்ற மறந்து கதிபெறுவது எக்காலம்." எல்லாம் ஈசன் செயல் என்ற திண்மையில் ஈடுபட்ட பக்தர்களுக்கு, தங்கள் பேர், பெருஞ் சீர், போற்றும் புகழ் இவை யெலாம் குறியில் நில்லாவாம். ஆகவே பிறந்த வாழ்க்கையின் கொள்கைதான் என்னவோ'! இறந்த இடம் பேசுவது :—

"என்னை மற இறையை நினை
அன்பால் சேவைசெய்
இதுவே போற்றும் பூஜை"

Forget me
Remember God
Serve in love
Only this is due worship
This is the epitaph
of him who dwells in the Lord

அலையாத பேரின்ப வானந்த வெள்ளத்தில்
நிலையா யுருவிறந்து நின்றனையே நெஞ்சமே.

"ஆத்ம போதம்"

(439-ஆம் பக்கத் தொடர்ச்சி)

தர்மம்

திரு. நா. பி., திரு. கி. சு.

நடு நிசி நேரம். தெள்ளத் தெளிந்த நீருடைய காவேரி அழகாக, அமைதியாக சென்று கொண்டிருந்தாள். என் மனது நிரம்பி யிருந்தது. சந்தோஷ மிகுதியால் ஒன்றை நினைக்கவும் சக்தி யற்றவனானேன். பால் போன்ற நிலவொளியில் ஸ்வர்ண விக்ரகம் போல் எழிலுடன் நிற்கும் சிலையின் முகத்தின் புன் சிரிப்பு மதியின் ஒளியையும் விஞ்சி நின்றது. கருணைக் கடலான ஜகஜ்ஜனனியின் ஆக்ஞையால் அனுப்பப் பட்ட சிலையின் கண்களின் பிரகாசம் எழுத்துக்களில் அடங்குமா! நீலக் கடலின் ஆழத்தை மதிப்பிடும் அளவு கோல் போல், பார்ப்போரின் விழிகளில் ஊடுருவிப் பாய்ந்து உள்ளத்தைத் தொட்டன அதன் விழிகள்.

பின் அந்த நேரமோ!

உலக மாந்தரின் ஊனக் கண்கள் பகலின் வெப்பம் தீர, அலுவலின் அலுப்பு தீர, உள்ளத்தின் கவலை மாற, நித்ரா தேவியின் அன்பணைப்பில் தன்னை மறந்திருக்கும் நேரம். தவ யோகி குழாங்கள் தம் லக்ஷயத்தைக் காண அமைதி வேண்டி, கண்கள் மூடி, மோன முற்று உள்ளத் திரையிலே உத்தமனின் ஒளி கண்டு உவகை யெய்தும் நேரம். இராத் தேவி பூர்ண எழிலுடன் புன்னகை பூத்து மந்தஹாசம் செய்யும் நேரம். மானிடரும், ஆவினமும்

பாராமற் பதையாமற் பருகாமல் யாதொன்றும்
ஓரா துணர்வுடனே யொன்றினையே நெஞ்சமே.

புள்ளினமும், புல் பூண்டும்—யாவும் செயலற்று, நிலை மறந்து, ஆண்டவன் அளித்த அருட் பிரஸாதத்தை அள்ளிப் பருகும் அமைதியான நேரம். ஆம். வாழ் வெனும் கானலிலே, அனுபவங்களாகிய கதிரவனின் வெப்பத்தால் காய்ந்த, துக்கமாய மணலால் பொசுங்கி, அமைதி வேண்டி, விடாய் கொண்டு, சந்தோஷக் கேணி யைத் தேடி அலைந்து, தினமும் அல்லலுறும் உலக ஜீவராசி களைக் கண்ணுற்றான் கருணாநிதி. கருணையும், பரிவும் கொண்டான். சற்று நேரமாவது இவை தன் கஷ்டங்களை வேதனைகளை மறந்து அமைதி பெற என்ன வழி என யோசித்தான். 'நித்திரை' என்னும் உபாயத்தால் அது ஸித்தித்தது. இவ்விதம் ஆண்டவனருளால் கிடைக்கப் பெற்ற அருட் பிரசாதமன்றோ ஆனந்த நித்திரை!

இவ்விதம் அந்த இரவில் மோனமும், அமைதியுமே நிலவியதா! பாற் கடலில் அமுதம் மட்டுமே தோன்றி யதா! ஆலகாலமும் அதனின்றே வெளிப்பட்டதன்றோ!

மதுவை உண்டு மதி மயங்கி, இந்திர போகமும் இதற்கு இணையாகாதென இறுமாந்து தள்ளாடித் தடு மாறும் குடி வெறியனின் கூக்குரல் ஒருபுறம்; கால் ஓட்டத்தின் வேகமோ, ஆறறிவின் அருமையோ அறியாது இளமையின் எக்காளத்தால் மதம் பிடித்து, பெண்மை யுடன் ஸரஸ ஸல்லாப விநோதங்கள் ஒரு புறம்; விஷந் தோய்ந்த அவள் வேல் விழி வீச்சுக்களிலே அடியுண்டு, அறிவிழந்து, கைப்பிடித்த காரிகையைக் கதறவிட்டு, கணிகையரைக் கட்டியழும் காம வெறியனின் பேய்ச் சிரிப்பு ஒரு புறம்; வாழ்வு முழுதும் நாத்திகம் பேசி, கண்டதே காட்சி, கொண்டதே கோலமெனக்

களவிறந்து கோலையிறந்து காண்பனவுங் காட்சியும்போ
யளவிறந்து நின்றதிலே யன்புற்றுய் நெஞ்சமே.

சூத்தாடி, அல்லலுற்று, நம்பிக்கை யற்று, கதியின்றி, செய்த பாவந்தீர, தன்னையே தான் மூடித்துக் கொள்ள எண்ணும் அப்பாவி ஒருவனின் கடைசிப் பிரார்த்தனை ஒரு புறம்; பேயும் நாய்களும் போல் தெருத் திண்ணைகளில் ஓலமிட்டு, தானும் கெட்டு, பிறரையும் கெடுக்கும் சில தான் தோன்றிச் சூதாடிகளின் பேய்ச் சிரிப்பு ஒரு புறம்; தக்க தருணம் எதிர் நோக்கி, நல்தருணம் வந்ததென அடிமேல் அடி வைக்கும் திருடனின் காலடிச் சப்தம், அது கண்டு, பின் சென்று, ஓயாது பின் துரத்தும், நன்றியுள்ள நாயினத்தின் குரைத்தல் சப்தம் ஒரு புறம்; பத்து மாதங்கள் சுமந்து உலகத்தின் ஜனத் தொகைக்கு மற்றொன்றை காணிக்கை யளிக்கப் போகும் அன்புள்ளம் கொண்ட ஒரு தாயின் முனகல்கள் மற்றொரு புறம்; இவ்விதம் ஈன்றெடுத்து, அன்புக்கு ஏங்கி நிற்கும் அன்னையை அவமதித்து, மனைவியின் கால் பிடிக்கும் பேடியினால் மிக வருந்தும் ஒரு தொண்டு கிழவியின் இருமல் சப்தம் இன்னொரு புறமாக, இவ்வாறு எழுந்த சில சப்தங்களைத் தவிர வேறொன்றும் இரவின் அமைதிக்குப் பங்கம் விளைவிக்கவில்லை !

இயற்கை யன்னை அந்நள்ளிரவிலும் தன் வேலைகளைச் சரிவர செய்து கொண்டிருந்தாள். காவேரி நதியின், கலக்க மில்லாததால் ஸ்படிகம் போல் தூய்மையான முத்துப்போன்ற ஜலங்களின் மேல் வீசும் யால் போன்ற நிலவின் ஒளி, தண்ணீருக்கே ஒரு தனிச் சோபையை அளித்துக் கொண்டிருந்தது. நிர்மலமாய் ஒளி வீசும் வானத்துப் பிறையோ, தன் பக்கத்தில் ஆவலுடன் பிரகாசிக்கும் நக்ஷத்ரக் கூட்டங்களை விட்டுத் தன் கிரண ஜாலங்களால்

பேச்சிறந்து சுட்டிறந்து பின்னிறந்து முன்னிறந்து
நீச்சிறந்து நின்றதிலே நேசமுற்றாய் நெஞ்சமே.

அவனியை அன்புடன் தழுவிக் கொண்டிருந்தான். இயற்கை அன்னை இந் நன்னிரவிலும் ஒரு குறைவுமின்றி பூரண எழிலுடன், தன் பரிவாரங்கள் புடைசூழ, பக்ஷபாதமின்றி, குற்றம் குணங்களுக்கு ஏற்ற தண்டனை கொடுத்து, உலக அரங்கின் ஸகல ஆடம்பரங்களுடன் ராஜரீகம் செய்து கொண்டிருந்த காட்சியே காட்சி!

அழகே அரியணையாக, குளிர்ந்த மந்த மாருதம் தடாகங்களின் குவிந்த தாமரைக் கொடிகளால் மெதுவாக பக்தியுடன் சாமரம் வீச, நட்சத்திரங்களாகிய மணிகள் கட்டியதால் பூரணமாய்ப் பிரகாசிக்கும் வெண் குடையான சந்திரன் தாபம் தணித்து தட்பம் வீச, மெதுவாய் வளைந்து வளைந்து செல்லும் அலைகளால் காவேரி நதி இனிமையாய் சங்கீதம் பாட, அவ் அலைகள் கரைகளில் மோதுவதால் கரைகள் அப்பாட்டை அநுசரித்து அழகாகத் தாளம் போட, காற்றில் அசைந்தாடும் பசுமையான இலைகளாகிய அப்ஸர நர்த்தகிகள் அப்பாட்டிற்குத் தக்கபடி நடனமாட, இவை கண்டு மெய்ம் மறந்த மலர்க் கொடிகள் வாசனையை அள்ளிச் சொரியும் மலர்களை 'ஜயவிஜயீபவ' என இயற்கை யன்னையின் மேல் தூவ, வானம் போல் பரந்து நிற்கும் சிவந்த கரைகளுள்ள பசும் பட்டாடை போல் வயல்கள் இயற்கை அன்னையின் எழிலை அதிகரிக்க, அழகிய மலைகளின் சிகரங்களே கிரீடங்களாகத் தலையில் மின்ன, கோவிலிற்குப் பின்புறம் பெருக்கெடுத்து ஓடும் ஓடைகள் இயற்கை யன்னை பாதங்களில் பூண்டிருக்கும் சலங்கைகளாக 'கல், கல்' என சப்திக்க, ஆகாயத்திலிருந்து பனித் துளிகள் வாசனையுள்ள புஷ்பங்களுடன் சேர்ந்து பன்னீர் தெளிக்க, காவேரி

விண்ணிறந்து மண்ணிறந்து வெளியிறந்து வொளியிறந்து
எண்ணிறந்து நின்றதிலே யோசரித்தாய் நெஞ்சமே.

நதியான சுருளான நீண்ட கூந்தலாலும், அதில் சொருகப் பட்டது போன்ற தாமரை, அல்லி முதலிய பல வர்ணப் புஷ்பங்களாலும் பிரகாசிக்கும் ரஜனி ராணி உலகரங்கில் தனி ஆட்சி செலுத்திக் கொண்டிருந்தாள் பரிவாரங் கள் புடை சூழ அவள் வீற்றிருந்த அழகே அழகு! மக்களைப் பரிபாலிப்பதில் அவளுக்கீடு அவளே தான்.

இவ்வாறெல்லாம் சிந்தனை செய்து தன்னை மறந் திருந்த என் மனம் திடீரென அவ்வமைதியைப் பிளந்து கொண்டு எழுந்த சப்தத்தால் விழித்துக் கொண்டது. ஆணித்தரமான குரலில் மீண்டும் சில பேசலுற்றது. 'குழந்தாய்! என்ன யோசிக்கிறாய்! இயற்கை அன்னையின் பலதரப்பட்ட கண்கவர் காட்சிகள் கண்டு உணர்வு இழந்தாயோ? அல்லது, உலகத்தின் கொடுமையான அக்ரமங்களைக் கண்டு மனம் பொறாமல் மௌனியானாயா? ஞானிகளையும், மஹான்களான தபஸ்விகளையும் கண்டு, நமக்கும் இப் பெரியார்களைப் போல் பரமனிடம் பதிந்த மனத்தனாய், ஏகாக்ர சித்தனாய். சிவானந்தத்தை அள்ளிப் பருகும் காலம் வரவில்லையே என்ற தாபமா! அல்லது, அலைகடலில் அகப்பட்ட துரும்பு போல், பெரும் புயலில் சிக்குண்டலையும் சிறு ஆலங் குச்சி போல் நிலை யில்லாது சஞ்சலப் பட்டுத் தவிக்கும் மனத்தின் விசித்திரங்களைப் பற்றி ஆச்சர்யப் படுகிறாயா? இல்லை, வாழ்வில் தீராத ஏதேனும் பெரும் பிரச்னையை நினைத்து தீவிரமாகச் சிந்தனை செய்கிறாயா? ஆம், இவைகளுக்கு எல்லாம் தக்க பதில் சொல்லி உன்னை ஆத்ம போதப் பேரின்ப நிலைக்குக் கொண்டு செல்வதற்குத் தானே, தேவி என்னை இங்கு உன்னிடம் அனுப்பித்திருக்கிறாள். (தொடரும்)

பார்த்த விடமெங்கும் பரமெனவே யுட்புறம்புங்
கோத்தபடி யுண்மையெனக் கொண்டனையே நெஞ்சமே.

கதிர்காம யாத்திரை

(475-ஆம் பக்கத் தொடர்ச்சி)

கி. வா. ஜகந்நாதன்

செல்லக் கதிர் காமம்

கதிர் காமத்திற்கு மூன்று மைல் தூரத்தில் **செல்லக் கதிர்காமம்** என்னும் இடம் இருக்கிறது. நான் அங்கே போக முடியவில்லை. அத்தலத்துக்கு அருகிலும் மாணிக்க கங்கை வருகிறதாம். அதன் கரையில் **மாணிக்கப் பிள்ளையார்** என்ற திரு நாமத்தோடு விநாயகர் எழுந்தருளி யிருக்கிறார். அப்பால் செல்லக் கதிர்காமமாகிய மலை இருக்கிறது. அதைச் சுவாமி மலை என்றும் **பழைய கதிர்காமம்** என்றும் வழங்குகிறார்கள். ஏறுதற்குச் சற்றுக் கடினமாக இருக்கும் என்று சொல்கிறார்கள். இந்த மலையின்மேல் கோயில் ஒன்றும் இல்லை. மேலே சென்று அவ்விடத்தையே முருகன் உறையும் இடமாக வழிபடுவது அன்பர்களுடைய வழக்கம் என்பர். கதிரை மலை, கதிர்காம வெற்பு, கதிர்காம மலை என்று சொல்லும் பெயர் களை உடையது இந்தச் செல்லக் கதிர் காமமே ஆகும். முருக வேளும் வள்ளி யெம்பெருமாட்டியும் ஏகாந்தத்திலிருந்து இன்புற்ற இடம் இத்திருததலம் என்று சிலர் சொல்கிறார்கள். செல்லக் கதிர் காமம் என்ற திரு நாமம் இநத அருமைப் பாட்டை நினைந்து வந்தது போலும்.

புகழேந்திப் புலவர் பாட்டு

கதிர்காமத்துக்கு ஒரு சமயம் புகழேந்திப் புலவர் வந்திருந் தார். அப்போது இங்கே தரிசனம் செய்து கொண்டிருந்த போது, ஒருமயில் பாம்பு ஒன்றைக் கவ்விக்கொண்டிருந்தது. சிறிது நேரத்தில் அதைக் கொத்திக் கிழித்து நாசமாக்கி விடும் என்று தோன்றியது. புகழேந்திப் புலவருக்கு அந்தப் பாம்பி னிடம் கருணை பிறந்தது. தமிழ் நாட்டில் அன்பர்கள், நாகத்தைக் கொல்ல அஞ்சுவார்கள். நாகப் பாம்பைச் சொப்பனத்தில் கண் டால், முருகனுக்குப் பிரார்த்தனை செய்து கொள்வார்கள். இந்த

ஊரிறந்து பேரிறந்து வொளியிறந்து வெளியிறந்து
சீரிறந்து நின்றதிலே சேர்ந்தனையே நெஞ்சமே.

நினைவுகாரணமாகப் புகழேந்திக்கு மயிலால் வருந்திய பாம்பி விடம் இரக்கம் எழுந்தது போலும், அந்த மயிலிடம், "மயிலே, நீ பாம்பை விட்டுவிடு" என்று விண்ணப்பம் செய்து கொண்டார். அவர் புலவராதலின் நம்மைப் போல வெறும் பேச்சாகவா சொல் வார்? பாட்டாகவே அந்த வேண்டுகோளை விடுத்தார்.

கதிர் காம வேலனிடம் மயல் பூண்ட பெண் ஒருத்தி சொல்வ தாக அந்தப் பாட்டைப் பாடினார். "அடடா! இந்தப் பாம்பை நீ பற்றிக் கொண்டாயே! எனக்கு இதனால் ஓர் உபகாரம் ஆக வேண்டி யிருக்கிறதே. இறைவனுடைய காதலால் வெம்பும் எனக்கு மாலைக் காலம் வந்தால் பெரிய ஆபத்து. சந்திரோதயம் ஆகி விட்டால் சொல்லவே வேண்டாம். போதாக் குறைக்கு என்னைப் பெற்ற தாயும் வளர்த்தவர்களும் என்னை மிரட்டும் மிரட்டல்கள் கொஞ்ச நஞ்சம் அல்ல. அவர்களுக்கு முன்னே என்னை வெதுப்பி வருத்தும் சந்திரன் உதயமானால், இந்தப் பாம்பை விட்டு அந்தப் பாழும் திங்களை விழுங்கிவிடச் சொல்லலாம் என்றல்லவோ நினைத் தேன்? நீ இதை வாயிலே கவ்விக் கொண்டாயே! தீயர்களுடைய கூட்டத்தைச் சீறும் வடிவேலை எடுத்த முருகனாகிய கதிர் காமப் பெருமானுக்கு வாகனமாகிய மயிற் பெருமாளே! உன்னை வேண்டிக் கொள்கிறேன்" என்ற பொருள் அமையும்படி ஒரு வெண்பா வெளியாயிற்று.

தாயரவை முன்வருத்தும் சந்த்ரோ தயந்தனக்குன்
வாயரவை விட்டுவிட மாட்டாயோ—தீயரவை
சீறு மயிற்பெருமான் தென்கதிர்கா மப்பெருமான்
ஏறு மயிற்பெருமா னே.

[தாயர் அவை—தாய்மார்களின் கூட்டம். பெற்றெடுத்த தாயும் ஐந்து வகைச் செவிலித் தாயரும் இருத்தலால் அவை என் றார். வாய் அரவை, தீயர் அவை—தீயவர்களாகிய அசுரர் கூட் டத்தை. சீறும் அயில் பெருமாள்; அயில்—வேல். மயிற் பெரு மாளே என்பது மயிலையே விளித்தபடி. குதிரை நம்பிரான் என்று

ஆண்பெண் ணலியென் றழைக்கவரி தாய்நிறைந்து
காண்பவரி தாயவிடங் கண்ணுற்றாய் நெஞ்சமே.

வாகனங்களையும் மரியாதையுடன் சொல்லும் வழக்குப் பற்றி, மயிற்பெருமாள் என்றார்.]

அற்புதங்கள்

இந்தத் தலத்தில் பலபல அற்புதங்கள் அவ்வப்போது நிகழ்ந்து வருகின்றன என்று சொல்வார்கள். சரியாகப் பேச வராதவர்கள் கதிர் காம வேலனுடைய தரிசனத்தால் நன்றாகப் பேசியதுண்டு. கண் ஒளி மழுங்கியவர்கள் இத்தலத்துக்கு வந்து முருகனுடைய அருளால் பார்வை பெற்று இன்புற்றவர் சிலர். பல காலம் மக்கட்பேறே இன்றி வருந்தி இங்கே வந்து பணிந்தமையால் குழந்தை பெற்றவர்கள் பலர்.

பழங்காலத்தில் கதிர் காமத்துக்குப் போகும் வழி செவ்வையாக இருக்கவில்லை. காட்டு வழியே போகவேண்டும். அக்காலங்களில் காட்டு மிருகங்கள் எதிர்ப்பட்டால் இறைவன் திரு நாமத்தை அன்பர்கள் சொன்னவுடன் அவை ஓடிவிடுமாம். அந்த ஒலியைக் கேட்டுக் கேட்டு, "இந்த ஒலிவரும் இடத்தை ஒன்றும் செய்யக் கூடாது" என்ற எண்ணம் அம்மிருகங்களுக்கு வந்திருக்க வேண்டும்.

இத்தகைய அற்புதங்கள் இங்கே நிகழ்வதைச் சுப்பிரமணிய க்ஷேத்திரக் கோவைப் பிள்ளைத் தமிழ் ஆசிரியர் பாடுகிறார்:

மாணிக்க நிறைகங்கை ஆடிஉன் னைப்பணிய
வந்திடும் பூதலத்தோர்
வாய்ஊமர் பாடவும் குருடர்கண் பார்த்திடவும்
மலடிகள் மைந்தர் பெறவும்
காணிற் குமாரவே லாவென்னும் அன்பரைக்
கரடிபுலி யானைசிங்கம்
காலிற் பணிந்தஞ்சி ஓடவும் கந்தனே
கண்கண்ட தெய்வமெனவே
ஆணிப்பொன் முத்திமண் டபமேவு கச்சியினுள்
அடியேனை ஆண்டு கொண்டென்

ஆங்கார மச்ச மகற்றி யறிவினொடு
தூங்காமற் றூங்கிச் சுகம்பெற்றாய் நெஞ்சமே.

ஆகத்தில் வந்தபிணி தீர்த்திடவும் முன்நிற்கும்
ஆறுமுக மெய்த தெய்வமே!
சேணிற் புலோமசை வளர்த்தபெண் பிடிக்கணவ!
செங்கீரை ஆடியருளே,
தேவரோடு மனிதர்பணி கதிர்காம வேலனே!
செங்கீரை ஆடியருளே.

பிறபாடல்கள்

இத்தல சம்பந்தமாகத் தமிழ் நாட்டு அன்பர்களும் இலங்கை அன்பர்களும் பாடிய பாடல்கள் பல. அருணகிரி நாதப் பெருமான் பாடிய திருப்புகழ்ப் பாக்கள் பல உண்டு. கதிர் காமத் தலத்தைப் பற்றி அவர் வாக்கில் வந்த செய்திகள் வருமாறு

1. இத்தலத்தில் பழங் காலததில் வன்வேடர்கள் முருக வேளைப் பூசை செய்து வழிபட்டனர்.

வனமுறை வேடன் அருளிய பூசை
மகிழ்கதிர் காமம் — உடையோனே!

2. கதிர் காமம் ஈழ நாடாகிய இலங்கையில் தென் திசையிலே இயற்கை வளம் நிறைந்த சூழலில் இருக்கிறது.

கரியயூ கத்திரட் பலவின்மீ திற்சுளைக்
கனிகள்பீ றிப்புசித் — தமராடிக்
கதலி சூழ் தெற்றிசைப் பயினுமீ ழத்தினிற்
கதிரகா மக்கிரிப் பெருமாளே.

3. இங்கே ஆறும் அருவியும் உண்டு.
கலைக வாரி போல்மோதி வடவை ஆறு சூழ்கீத
கதிர காம முதூரில் — இளையோனே
கடகட அருவிகள் தபவரி அதிர்கதிர்
காமத் தரங்க — மலைவீரா.
மணிதரளம் வீசி அணியருவி சூழ
மருவு கதிர்காமப் — பெருமாள்காண்.

ஆதியாய் நின்ற வகண்டபரி பூரணத்தைச்
சாதியா நின்றவிடஞ் சார்வுற்றுய் நெஞ்சமே.

4. கதிர்காம வேலன் மாணிக்கத் திருவுருவுடையவன்.

கனகமா ணிக்க வடிவனே மிக்க
கதிரகா மத்தில் — உறைவோனே!

3. கதிர்காமத்தில் மலை இருக்கிறது, (செல்லக் கதிர்காமம்.)

கதிரகாம வெற்பில் — உறைவோனே!
கதிர காமத் தரங்க — மலைவீரா!
கதிரகா மக்கிரிப் — பெருமானே!

இத்தலத்தைப் பற்றி முற்காலத்திலும் பிற்காலத்திலும் இயற்றப்பெற்ற கலம்பகம், பள்ளு, மாலை, காதல், திருப்பள்ளியெழுச்சி, பதிகம், பிள்ளைத் தமிழ், நான்மணிமாலை முதலிய பிரபந்தங்களும், தனிப் பாடல்களும், சில கீர்த்தனங்களும் இருக்கின்றன. இத்தலத்தின் பெருமையை எடுத்துரைக்கும் புத்தகங்களை ஆங்கிலத்திலும் தமிழிலும் பல அன்பர்கள் எழுதியிருக்கிறார்கள். அவற்றுள் பல வகையிலும் சிறப்புடையதாகி விளங்குவது, என்னுடைய நண்பரும் சிறந்த ஆராய்ச்சியாளரும் தமிழ் அறிஞருமாகிய திரு குல. சபாநாதன் எழுதிய 'கதிர்காமம்' என்ற புத்தகம். இலங்கையின் புராதன சைவாலயங்கள் என்ற தொடரில், இந்தப் புத்தகத்தை வெளியிட்டிருக்கிறார்.

★

முடிவுரை

வாக்கு மனம் கடந்த வள்ளலாகிய இறைவனை வழிபடும் மக்களுக்குத் திருவுருவமும் திருநாமமும் உடையவனாகிய அப்பெருமான் எழுந்தருளினான். அவன் அருளே கண்ணாகக் காணும் பெரியோர்கள் அவனுடைய திருக் கோலத்தைத் தரிசித்து, மற்ற மக்களும் தெரிந்து கொள்ளும்படி அவன் திருவுருவம் இத்தகையது என்று தெரிவித்தருளினார்கள். அவரவர்கள் தங்கள் தங்கள் அநுபவத்தில் கண்ட கோலங்கள் பலவாதலினால், கடவுளுக்குரிய திருவுருவங்களும் பலவாயின. எல்லாவடிவங்களும் இறைவனுடைய அருளை நினைப்பதற்குரிய அடையாளங்க

விருப்புவெறுப் பில்லாத வெட்ட வெளியதனில்
இருப்பே சுகமென் றிருந்தனையே நெஞ்சமே.

ளாய், தம்மை வழிபட்டோர்க்கு உள்ள நெகிழ்ச்சியையும் தூய்மையையும் துன்ப நீக்கத்தையும் அருளி, ஞானமும் இன்பமும் பெறும் கருவிகளாக உதவுகின்றன. ஆதலின் இந்த நாட்டிலே தோன்றிய பெரியோர்கள் பலரும், கடவுளுடைய திருநாமத்தையும் திருவுருவத்தையும் போற்றி வழிபட்டனர். முனிவரும் ஞானியரும் அன்பரும் திருக்கோயில் அமைத்துக் கடவுள் திருவுருவங்களை நிறுவிப் பூசித்தனர். அவை அங்கங்கே மக்கள் வழிபட்டு நன்மை பெறும் தலங்களாக விளங்குகின்றன.

தமிழ் நாட்டில் தோன்றிய ஆழ்வார்களும், நாயன்மார்களும், தலங்களுக்குச் சென்று வழிபட்டுப் பல பாடல்களைப் பாடினர். அரசர்களும் தம் செல்வத்தைப் பயன் படுத்த மிகச் சிறந்த வழி, திருக் கோயிலை அமைத்தலும் பாதுகாத்தலும் என்பதை உணர்ந்து அவற்றைச் செய்தார்கள். இவற்றால் தமிழ் நாடு எங்கணும் திருக் கோயில்கள் எழுந்தன. "ஊராளுேர் தேவகுலம்", "கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்பது போன்ற மொழிகளைத் தமிழிலேதான் காண முடியும்.

இலங்கையிலும் தமிழர் குடியேறினர். அங்கும் தலங்கள் சில சில எழுந்தன. முருகவேளுக்குரிய தலங்களில் கதிர் காமம் மிக மிகச் சிறந்தது. அங்கே ஆண்டு தோறும் சென்று வழிபடும் அடியார் பலர். போக்கு வரத்து வசதிகள் இல்லாத பழங் காலத்தில் கூட்டம் கூட்டமாக மக்கள் இத்தலத்துக்குச் சென்று வழிபட்டார்கள். அப்போது சென்ற மக்களின் தொகை அதிகம்; அவர்களுடைய பக்தியும் நம்பிக்கையும் அதிகம்; அதனால் அவர்கள் அடைந்த பயனும் அதிகம்.

தமிழர்களுடைய பக்தி எத்தனை சிறப்பானது என்பதைத் தெரிந்து கொள்ள, கடல் கடந்து காடு கடந்து, கல்லும் முள்ளும் கடந்து, வன விலங்குகளுக்கும் அஞ்சாமல் கதிர் காமத்துக்கு அவர்கள் சென்று வழிபட்டார்கள் என்ற செய்தி ஒன்றே போதும். இந்த அன்பு நெறிதான் தமிழ் நாட்டினரைக் கலை, இலக்கியம், அருள் ஆகிய துறைகளிலே ஈடுபடும்படி செய்கிறது.

ஆருமுருப் பேரண்டத் தப்புறத்து மிப்புறத்தும்
நீருமுப்பு மென்ன நிலைபெற்ருய் நெஞ்சமே.

இந்த நிலை தமிழ் நாட்டில் மங்கி மறைந்தால் தமிழ்ப் பண்பே மறைந்து போகும்; தமிழ் நாடே இல்லையாகி விடும். மங்கும் படி முருகன் விடமாட்டான் என்பது உறுதி.

கதிர் காமம் இயற்கை எழில் நிறைந்த முருகுச் சூழல். பல காலமாக அன்பர்கள் போற்றி வழிபட்ட ஆத்ம சக்தி நிலையம். உள்ளே இன்னது இருக்கிறது என்று அறியாமல் இருந்தாலும் சிரமம் பாராது தொண்டர்குழாம் வந்து வழிபடும் மறைக் கோயில். முருகனுடைய அற்புதத் திருவருளைப் பெறுவதற்கு ஏற்ற பரம ரகசிய மாளிகை. காலத்தினால் அழியாத நம்பிக்கை யென்னும் அடிப்படையின் மேல், அன்பர்கள் அன்பாகிய கால்களெழுப்பி உணர்ச்சி யென்னும் விதானம் அமைத்துக் கருத்து உலகத்தில் ஓங்க வைத்த மாணிக்க பீடம். புகழ்ப் பாமாலைகளைப் புலவர் வனைந்து மகிழ்ந்த அலங்கார மண்டபம்.

இந்தத் திருத்தலத்தை வழிபடும் வாய்ப்புக் கிடைக்கும்படிச் செய்த என் நல்லூழுக்கு நன்றி பாராட்டுகிறேன்.

ஈழமெனும் தீவகத்தில் தென்பகுதி யினிற்காட்டின்
இடையே வேடர்
வாழுமிடந் தனிற்றூய மாணிக்க கங்கையணி
வளர்தீ ரத்தில்
ஏழுபிற விக்கடலை ஏறவிடுந் தெப்பமாம்
இருதாள் கொண்டு
சூழுமடி யார்வினையைத் தீர்த்தருள்வான்
கதிர்காமச் சோதி வேலன்.

அதிசயம் அநேகமுற்ற பழநி

(திருப்புகழ்சதுரர் சே. த. இராமலிங்கம் பிள்ளை)

தென்பழநிநாதன் திருவுரு

1. பதும பீடம்: பழநிப் பதியில் எழுந்தருளும் பரமன் பதுமாசனம் என்ற தாமரைப் பீடத்து உள்ளான். அன்பர்

உடலுக வேயிருந்து முணரவரி யாரேடு
கடனீரு மாறும்போற் கலந்தனையே நெஞ்சமே.

இதய தாமரை மணக்க என்றும் எழுந்தருளும் திறமிது வாம். 'மலர்மிசை ஏகினான்' என்ற வள்ளுவர் வாக்கு இப்பெருமானுக்கு உரித்தாகக் கொள்ளலாம் போலும். 'பழநித் தலம் ஆறு திருப்பதிகளுள்ளும், ஆறு ஆதார நிலையாங்களிலும் மூன்றாவதாக நிலவுவது என்பது முன்னரும் கூறப்பட்டது. இந்த மூன்றாவதான மணி பூரகமென்னும் நாபித் தலத்தில் பத்து இதழுடன் ஒரு தாமரை உண்டு. (இங்ஙனமே மூலாதாரத்தில் நான்கும் சுவாதிஷ்டானத்தில் ஆறும் அநாகதத்தில் பன்னிரண்டும், விசுத்தியில் பதினாறும், ஆக்ஞையில் இரண்டு இதழ்களும் கொண்ட தாமரைகள் உள.

நாலி லங்கதின் மேல்வி நாயகன்
மூவி ரண்டினில் மேவு பூமகன்
நாத னும்தச மீது மால்இரு—சடமீதே
நாம சங்கர னுர்து வாதச
நாலி லங்கதி சேரனு

என்ற திருப்புகழில் ஆதார பிரதேசங்களிலுள்ள தாமரை இதழ்களும் தேவதைகளும் கூறப்படுவது நினைக்கத்தகும்.

யோக நிலை யுணர்ந்த ஞானிகள் நம் தண்டபாணியை மணிபூரகத் தலமான பழநியில் ஞானத் தாமரை மேல் தியானக் கண்ணால் கண்டு மகிழ்வர் என்பதற்கே பழநிப் பரமன் பதுமாசனத்தி லொளிர்கின்றான்.

"முதுணர்ந்த தியான பூரண
ஞான முண்டக மீதிலேறிய
மோன சுந்தர யோக நாயக"

(திருவாவினன்குடி திருப்புகழ்)

நெடியகத்தைப் போக்கி நின்ற சழக்கறுத்துப்
படிகந்துக் கும்பம்போற் பற்றினையே நெஞ்சமே.

செவ்வேளர்ந்திறம்

இளம் பூரணனை தண்டாயுதப் பெருமான் குங்கும நிறமா யுள்ளான். அவனணிந்துள்ள ஆடையும் செந் நிறமேயாம். இஃதன்றி இவனது திருவடி, திருமேனி, திருக்கை வேல், சேவல் அனைத்தும் செந்நிறமாதலை,

"தாமரை புரையும் காமர் சேவடி
பவளத்து அன்னமேனி, துவர் ஒளிக்
குன்றி ஏய்க்கும் உடுக்கை, குன்றின்
நெஞ்சுபக எறிந்த அஞ்சுடர் நெடுவேல்
சேவலங் கொடியோன் காப்ப
ஏமம் வைகல் எய்தின்றால் உலகே
(பாரதம் பாடிய பெருந்தேவனார்)

[தாமரை மலர் போன்ற அழகிய செம்மையான திருவடிகளும், பவளம் போன்று (சிவந்த) மேனியும், செந்நிறமான குன்றி மணி (குண்டு மணி) போன்ற உடையும், கிரௌஞ்ச மலை பிளக்க எறிந்த (சிவந்த) அழகிய ஒளி மிக்க நீண்ட வேலும், (செஞ்சூட்டு) சேவல் கொடியோனை செவ்வேள் காத்தலினால் இவ்வுலகு என்றும் காவலைப் பெறுகின்றது.]

'செய்யன், சிவந்த ஆடையன்' (முருகு)
'கையோ அயிலோ கழலோ முழுதும்
செய்யோய் மயிலேறிய சேவகனே'
(கந்தரனுபூதி)

என்ற திருவாக்குகளால் செம்மேனி அம்மானை முருகன் உலகைப் புன்னெறியதனிற் செல்லும் போக்கினை விலக்கி, மேலாம் நன்னெறியாம் செந் நெறி யொழுகச் செய்யும் செவ்வேள் என்பது பெற்றாம். இனிக் கருநெறியான

மோனகி யெங்கும் விளங்கும் பரம்பொருளிற்
பாலூறு மென்சுவைபோற் பற்றினையே நெஞ்சமே,

பிறவிக் கேதுவான காம நெறி செலுத்தும் கருவேளான மன்மதன் 'கார்வேள்' என்பது உன்னுக.

தண்டபாணி, தன் திருத்தோள் மீது உத்தரியம் (மேலாடை) அணிந்துள்ளான். திரு மார்பில் பூணூல் புரளுகிறது. மேகலாபரணமும் உட்டியாணமு முடைய வன். ஞானிக் கேற்ற கோவண முடையவன். இடது கரத் தினை இடுப்பில் வைத்து வலக் கரத்தில் தண்டேந்தி நிற்பன். இக்கோலம் எம்பிரான் ஞான தேசிகனுயும், பிரம சாரியாயும் விளங்கும் திருக் குறிப்பு காட்டும்.

இவ்வுருவச் சிறப்பின் தோத்திரமாக
"ஊருஷஸ தஞ்ச தண்டஞ்ச; மௌஞ்ஜீ கௌபீநஸம்யுதம் |
சிகாயக்ஞோப வீதஞ்ச ரக்த வஸ்த்ரோத்தரீயகம் |
மேகலாம்பர உட்யாணம் புல்ல பத்மாஸனஸ்திதம் |
சிந்தூரம் ஸௌந்தரம் ரூபம் உபநயனஸ்ய விக்ரகம் | "
(ஆகமசாஸ்திரம்)

கூறுவது காண்க.

அபிடேக அலங்கார அற்புதம்:

பரமனைப் பால் கொண் டாட்டுவார்க்குப் பகைவர் நாச மடைவர் என்பது வீராகமம். பழநித் தலத்தில் பால் காவடிகள் அதிகம் என்பது உலகறிந்ததே. பாலாபி ஷேகத்தில் பழனிப் பிரான் காட்டும் தரிசனம் கண் கொள்ளாக் காட்சி யாகும். திரு நீறு அபிஷேகத்தில் 'நீறுபடு மாழை பொரு மேனியனுயும்', பஞ்சாமிர்த அபி ஷேகத்தின் போது பவரோக வயித்திய நாதனுகவும், இராஜ உடையில் 'தேவர் சொர்க்கச் சக்கரவர்த்தி' யாகவும் அருளுருக் காட்டுவான். இப் பெருமானுக்குப் புனுகு சட்டம் தினமும் மாருது சாத்தப் படும் என்பதும்,

---

நீரொடுதண் ணலிவிண்டு நீரான வாறேபோல்
ஊரொடுபே ரில்லானே டொன்றினையே நெஞ்சமே.

பச்சைக் கற்பூர முதலிய நறுமணம் நாறும் அலங்காரப் பெருமையையும்

"மருப்புழுகு முட்டா திருப்பழநி
வாழ்வுக்குகந்து அடியர் ஆவிக்குள் நின்றுலவி வரு-பெருமாளே"
"பழநிவரு கற்பூர கோலசகலா அமரர்-பெருமாளே"

என்று திருப்புகழ் நாவலர் வாயாரப் புகழ்தலை அறிக.

இவ்வாறு விளங்கும் பெருமான் நவலோகமும் கை தொழும் நிச தேவனாய் பதினாலுலகோர் தொழு பழநியில் வீற்றிருத்தல் கண்டு, மாதேவர் முதல் மண்ணவர்வரை யில் அருள் பெற்ற அற்புதங்கள் அளப்பிலவாம். அவற்றை அடுத்த இதழில் காண்போம்.

கொற்கை முத்து

(ஆர். பி. சேதுப் பிள்ளை.)

தொன்னலம் வாய்ந்த தென்னாட்டில் தமிழ் மன்னர் மூவரும் தொன்று தொட்டு வாழ்ந்தனர் என்பது சரித்திர உண்மை யாகும். 'பாண்டி நாடே பழம் பதியாகும்' என்று மணிவாசகனார் புகழ்ந்துரைத்த நன்னாட்டில் முத் தமிழ் வளர்த்த பாண்டியன் மீனக் கொடியோடு மிளிர்ந் தான். செந்நெல்லும் கரும்பும் செழித்தோங்கிய சோழ நாட்டில் வேங்கைக் கொடியோனாய் வளவன் அரசு வீற்றிருந்தான். மஞ்சுலாவும் சோலை சூழ்ந்த மலை நாட்டில் வில்லவனாகிய சேரன் அமர்ந்து விளங்கும் புகழ் எய்தினான். இவ்வாறு தமிழ் மன்னர் குடையின் கீழ் அமைந்த மூந்நாடும் அளவிற் குறைந்ததே யாயினும் வளமார்ந்த செழு நிலமாய் விளங்கித் திகழ்ந்தது.

இப்பிறப்பைப் பாழ்ப்படுத்தி யிருந்தபடி யேயிருக்கச்
செப்பவரி தாயிடஞ் சேர்ந்தனையே நெஞ்சமே.

இங்ஙனம் செழுமை யுற்று நின்ற நன்னாடுகளின் பெருமை யறிந்த ஔவையார்,

வேழ முடைத்து மலைநாடு மேதக்க
சோழ வளநாடு சோறுடைத்து - பூழியர்கோன்
தென்னாடு முத்துடைத்துத் தெண்ணீர் வயற்றொண்டை
நன்னாடு சான்றோ ருடைத்து.

என்று அருளிய புகழுரை பொருளுரையாகும். வில்லவன் ஆண்ட சேர நாட்டை வேழமுடைய மலை நாடென்றும், வளவன் ஆண்ட நீர் நாட்டைச் சோறுடைய வளநா டென்றும், மீனவன் ஆண்ட தமிழ் நாட்டை முத்துடைய தென்னாடு என்றும் ஔவையார் அறிந்துரைத்துப் போந்தார். தென் கடலில் விளைந்த முத்து, ஆழ நெடுந்திரை ஆழி கடந்து யவன நாட்டு மாதரது கழுத்திலும் காதிலும் அழகுற இலங்குவதாயிற்று. குமரிக்கும் கோடிக்கும் இடையே அமைந்த கொற்கைத் துறையில் குளித்த மூத்து, கலத்திலும் காலினும் சென்று காவலர் முடிமேல் கனித்திலங்குவ தாயிற்று. கலந்தரு திருவைக் காதலித்த யவனர் கொற்கைத் துறையில் வாழ்ந்த குடிகளோடு கலந்துறைவா ராயினர். இப் பெருந் துறையில் விளைந்த முத்தின் அருமையைப் பழந் தமிழ் நூல்களில் பரக்கக் காணலாம்.

தென்னவன் நாட்டில் தெள்ளிய மூத்து விளையும் துறைகளைச் செவ்வையாய் அறிந்த பொருனை நாட்டுப் புலவராய குமரகுருபர அடிகள்,

"கோடும் குவடும் பொரு தரங்கக்
குமரித் துறையில் படு முத்தும்

மேலாம் பதங்களெல்லாம் விட்டுவிட் டாராய்ந்து
நாலாம் பதத்தி னடந்தனையே நெஞ்சமே.

கொற்கைத் துறையிற் றுறைவர்ணர்
குளிக்கும் சலாபக் குவான் முத்தும்
ஆடும் பெருந்தண் துறைப் பொருனை
ஆற்றிற் படுதெண் நிலாமுத்தும்
அந்தண் பொதியத் தடஞ்சாரல்
அருவி சொரியும் குளிர் முத்தும்"

என்று அழகுறத் தொகுத்துரைத்தார். குமரித் துறையி லும், கொற்கைத் துறையிலும், பொருனை யாற்றிலும், பொதியத் தருவியிலும் ஒளி மிகுந்த விழுமிய முத்துப் பிறக்குமென்று அடிகள் அழகுற அருளிப் போந்தார். இவ்வாறு புலவர் நாவிற் பொருந்திய கொற்கைத் துறை யின் அருமை யறிந்த சோனகரும் யவனரும், தென் குமரிக்குத் தென்பா லமைந்த திரைக் கடலை 'கொற்கைக் கடல்' என்றே குறித்து வைத்துள்ளனர். மணிமாட மதுரைமா நகரம் மீனவன் தலை நகராய் மிளிர்வதன் முன்னமே கொற்கைத் துறை இணையற்ற துறைமுக மாய்த் திகழ்ந்தது. தென்புலம் காக்கும் தென்னவனைக் 'கொற்கைக் கோமான்' என்று சிறுபாணாற்றுப்படை குறிக்கின்றது.

இங்ஙனம் நற்றமிழ் வல்ல கவிஞர் பாட்டில் பயின்ற கொற்கைப் பெருந்துறை இப்பொழுது சீரழிந்த ஒரு சிற்றூராகப் பொருனை நாட்டில் அமைந்திருக்கின்றது. நித்திலம் நல்கிய நீலத் திரைக் கடல் இப்பொழுது நான்கு மைல்களுக்கு அப்பால் விலகி நிற்கின்றது. அந்நாள் அலை யொலி மலிந்த மூதூர் இப்பொழுது அமைதியுற்றுத் துஞ்சுகின்றது. கொடுப்போர் ஓதையும் கொள்வோர் ஓதையும் இடையறாது நிகழ்ந்த கொற்கை மூதூர்,

---

கடங்கடங்க டோறுங் கதிரவனா டாடி
யடங்குமிடந் தானறிந் தன்புற்றுய் நெஞ்சமே

காதலனை இழந்த தற்புடையாள் போல் கவினிழந்து பொலிவிழந்து நிற்கின்றது. முத்தம் தரும் தென் கடல், கொற்கைக்கு முத்தம் தராது விலகிய பொழுது காயல் என்னும் பெயரமைந்த கடற் கரையூர் பெரு நகராய்த் திகழ்வதாயிற்று. பதின்மூன்றுவது நூற்றுண்டில் தமிழ் நாடு போந்த மார்க்கபோலோ என்னும் யவன அறிஞர் இக்காயலின் பெருமையை விரித்துக் கூறியுள்ளார். இக்காயலும் பிற்காலத்தில் கருங் கடலால் கைவிடப் பட்டது. துறைமுகமாக அமைந்த இடங்களைத் தூர்த்துக் கொடுங் கடல் கொண்ட குமரி நாட்டை மீட்கக் கருதும் பொருனை யாற்றின் பெருமை யறிந்த போர்ச்சுகீசியர், இக் காயலைக் கைவிட்டுத் தூத்துக்குடியில் துறை முகம் அமைக்கத் தொடங்கினுர்கள். பொருனை யாறும் பெருங் கடலும் போர் புரியும் இடத்தில் அகப்படாத இவ்வூர் இன்றளவும் தென்னுட்டில் சிறந்த துறைமுகமாகவும் மூத்துக் குளிக்கும் துறையாகவும் நின்று நிலவுகின்றது.

திருஞான சம்பந்தர் திருநெல்வேலிக்கு எழுந்தருளிய போது, கொற்கையின் முத்துச் சலாபத்தால் எத்திசையும் புகழ் மணக்க ஏற்றமுற் றிருந்தது அந்நகரம். அச்சீர் மையை அறிந்து மகிழ்ந்த செஞ் சொற் கவிஞர் 'திக் கெலாம் புகழுறும் திருநெல்வேலி' என்று அத்திரு நகரைப் புகழ்ந்தார். அந்நகரில் கோயில் கொண்ட இறைவனைத் 'திருநெல்வேலி யுறை செல்வர்' என்று போற்றினுர். கொற்கை அழிந்து விட்டாலும் நற்றமிழ் வல்ல ஞான சம்பந்தர் பாட்டு அழியாத அருட் செல்வ மன்றோ?

ரா. பி. சே.

கற்றவனுய்க் கேட்டவனுய்க் காணுனுய்க் காண்பவனுய்
உற்றவனுய் நின்றதிலே யொன்றுபட்டாய் நெஞ்சமே.

கீதையின் சாரம்

507-ஆம் பக்கத் தொடர்ச்சி

பார்த்திபன் :—கண்ணா! மனத்தினிடத்து இருக்கக் கூடிய இன்ப துன்பங்கள் எவ்வாறு ஆன்மாவைப் பற்றி நிற்கின்றது?

கண்ணன் :— காண்டீபா! இந்த மனமானது விவேகமில்லாததைப் பொருந்த வேண்டி ஆன்மாவாகிய தன்னிடத்திலும், அந்த மனம் அனுபவிக்கும் இன்ப துன்பங்கள் பொருந்தின.

பார்த்திபன் :—கண்ணா! அறுதியாக இருக்கக் கூடிய இன்ப துன்பங்கள், பின்பு ஒரு காலத்தில் இந்த ஆன்மாவை விட்டு நீங்கி விடுமோ?

கண்ணன் :—தனஞ்சயா! எப்படி நமது கையில் இருக்கும் செவந்த மலரின் நிறமானது, சுத்தமான படிங்குக் கல்லினிடத்து ஏறித் தோற்றினும், ஆராயுமிடத்து உண்மையில் படிங்குக் கல்லினிடத்து அந்த மலரின் நிறம் இல்லாதது போல், இந்த மனத்தினிடத்துத் தோன்றும் குணங்கள் ஆன்மாவினிடத்துத் தோற்றினும், எப்படி படிங்குக் கல்லினிடத்து அந்த மலரின் நிறம் காண்பது இல்லையோ, (அது போல்) இந்த ஆன்மாவினிடத்து மனத்தின் குணங்களைக் காணமுடியாது.

பார்த்திபன் :—கண்ணா! நீ சொல்வது போல் ஆன்மாவானது, சுத்த பளிங்கு போன்று சச்சிதானந்த ரூபமாய் இருக்க, மிகவும் இராகமாகிய அழுக்கானது, ஆன்மாவினிடத்தில் பொருந்தியது எதனால்? அதன் காரணத்தை தேவரீர் எனக்கு விளக்கி யருளுவீர்.

நாலுவகைக் கரண நல்குபுல னைந்துமொன்ருய்ச்
சீலமுற்று நின்றதிலே சேர்ந்தனையே நெஞ்சமே.

கண்ணன் ;—காண்டீபா ! அநாதியாகவுள்ள சஞ்சித வாசனையினால், இராகமாகிய களங்கமானது வந்து சேர்ந்தது. அதுவே மனத்திற்குப் பந்தம். ஆகையால் இந்த பந்த மிருக்கும் வரையில் ஒருவன் முத்திக்கு உரியதாகிய மோக்ஷமடைவதற்கு தகுதியில்லாதவ னாகிறான்.

பார்த்திபன் :—கண்ணா ! பந்தம் என்கிறீர் ? முத்தி என்கிறீர் ? அப்படியானால் இந்தப் பந்தத்தின் குணங்கள் என்ன ? முத்தி என்றால் என்ன ? இதைத் தாங்கள் என்னுடைய புத்தியானது நன்றாகத் தேர்ச்சியடையும் பொருட்டு பந்த முத்தியினுடைய தன்மைகளைப் பிரித்து விளக்கி யருளுவீர் என்று கண்ணன் திருவடிகளை வணங்கி நின்றான்.

கண்ணன் :— காண்டீபா ! உன்னுடைய நல்லாத உடம்பு, பொறி, புலன்களை உன்னுடையது என்று பொருந்துகின்ற அபிமானங்கள் இருக்கிறதே, அதுதான் பந்தமாகும். வேதங்களும், ஆன்றோர்களும், ஒப்புக் கொள்ளாத இந்த அபிமானத்தை விட்டால், (அதுவே) பக்குவமுள்ளவர்கள் அடைவதற்குரிய தாகிய மோக்ஷம்.

பார்த்திபன் :—கண்ணா ! நானல்லாத இந்தவுடம்பு, பொறி, புலன்களை நான் என்று எண்ணுகின்ற இந்த அபிமானம் என்னிடத்தில் பொருந்துகின்ற விதத்தையும், இந்த அபிமானத்திலிருந்து நான் நீங்கி விடுவதற்குரிய வழியையும், இதனால் நான் தவியாமல் இதன் உண்மைகளைத் தெரிந்து கொள்ளும்படி தேவரீர் எனக்குத் தயவு கூர்ந்து பகர்ந்தருளுவீர்.

கண்ணன் :—அருச்சுனா ! உன்னுடைய உண்மை வடிவத்தை நீ மறந்ததனால், அந்த மறதிவடிவாய அஞ்ஞானத்

விட்டிடமுந் தொட்டிடமும் விண்ணிடமு மண்ணிடமும்
கட்டுமொரு தன்மையெனக் கண்ணுற்றாய் நெஞ்சமே.

தினால் அபிமானம் வந்து சேர்ந்தது. ஆகையால், என்று உன்னை விட்டு அந்த அஞ்ஞானம் போய் விடுகிறதோ அன்றே அதனால் உண்டாகிற அபிமானமும் ஒழிந்து விடும்.

பார்த்திபன் :—கமலக் கண்ணா! நீ எனக்குச் சொல்லி யருளிய அந்த அஞ்ஞானம், என்னிடத்தில் பொருந்து கின்ற விதத்தையும், அப்படிப் பொருந்துகின்ற அந்த அஞ்ஞானம், என்னை விட்டு நீங்குவதற்கான வழியை யும் உரைத்தருளுவீர்.

கண்ணன் :—பற்குனா! அஞ்ஞானம் உன்னிடத்தில் எப்படி வந்ததென்று நான் உனக்குச் சொல்லத் தகுந்த தல்ல. அவ்வஞ்ஞானம் உன்னிடத்தில் அநாதியாகவே வந்து அடைக்கலம் புகுந்த தாகும். ஒருவன் தன்னுடைய உடையில் அழுக்கு எப்படி வந்தது என்றால் சொல் வதற்கு இயலுமா? அவன் ஆடையில் இருக்கிற அழுக்கு எவ்வாறு போகும் என்று அதற்குத்தான் வழி சொல்ல முடியும். ஆகையால், நீ அஞ்ஞானம் உன்னிடத்தில் எவ்வாறு வந்து பொருந்தியது என்று கேட்காதே? அவ் வாறு உன்னிடத்தில் இருக்கிற அவ்வஞ்ஞானம் உன்னை விட்டுப் போகும் வழியைத் தெரிந்து கொள். எப் பொழுது உனக்கு உண்மை ஞானம் உண்டாகிறதோ, அன்றே இந்த அஞ்ஞானம் உன்னை விட்டு நீங்கிவிடும்.

பார்த்திபன் :—கண்ணா! சூரியனிடத்தில் நெருங்கி வந்த பூத இருளைப்போல, உண்மைப் பிரகாசமாகிய என்னிடத்தில் இந்த அஞ்ஞானம் வருவதற்கு வழி யுண்டோ? இங்ஙனம் அந்த அஞ்ஞானம் வருவதற்கு ஏது வில்லாத போது என்னிடத்தில் அது வந்திருக்கின்ற விதம் எதனால்?

எந்தெந்த நாளு மிருந்தபடி யேயிருக்க
அந்தச் சுகாதீத மாக்கினையே நெஞ்சமே.

கண்ணன் :—காண்டீபா! உனக்கு இந்தவுடம்பு, பொறி, புலன்களுக்கு வேருகிய உண்மைப் பிரகாச மான வடிவம் என்ற அறிவு உண்டாகுமாயின், அன்றே உன்னிடத்தில் அஞ்ஞானம் இல்லை. அப்படிப் பட்ட உண்மை ஞானம் உனக்கு வந்துவிட்டால், எப்பொழுதும் நீ ஆனந்தக் கடலாய் இருப்பாய்.

பார்த்திபன் :—கண்ணு! வேதாந்த நீதிகளைக் கேட்டலினுலும், குருவினுடைய உபதேசத்தினுலும், உண்மையறிவு உதயமான உடனேயே இந்தக் கொடிய துன்ப இன்பங்கள் என்னை விட்டு நீங்காதது எதனுல்?

கண்ணன் :—பற்குனு! பரோக்ஷ ஞானத்தால் இன்பதுன்பங்கள் வந்து பொருந்துதல் நீங்காது. பின் எதனுல் நீங்கும் என்ருல், அந்த இன்ப துன்பங்கள் இரண்டும், பரோக்ஷ ஞானத்தால் நீங்கிவிடும். (நிவர்த்தியாகும்).

பார்த்திபன் :—கண்ணு! பரோக்ஷத்தின் தன்மை என்ன? அபரோக்ஷத்தின் தன்மை என்ன? அதைத் தாங்கள் என்னுடைய ஆவரணத்தால் மறைக்கப் பட்டுள்ளதாகிய புத்தியானது நன்ருக உணரும் பொருட்டு பிரித்து எனக்கு கூறியருளுவீர்.

கண்ணன் :—பற்குனு! குருவின் மூர்த்தமாக சாத்திர விசாரணையினு லுண்டான அறிவு இருக்கிறதே, அது தான் பரோக்ஷ ஞானம். அப்படிக் கேட்டதை தன்னுடைய அனுபவத்தால், நான் பிரஹ்மமாக இருக்கின்றேன் என்று உண்டாகும் அகண்டாகாரமான விருத்தி ஞானமே அபரோக்ஷமாகும்.

எத்தேசமும் நிறைந்தே யெக்கால முஞ்சிறந்து
சித்தாய சித்தினிடம் சேர்ந்தனையே நெஞ்சமே.

பார்த்திபன் :—கண்ணா ! உண்மையில் நான் பிரஹ்மம் என்று தெரிந்திருந்தும், இந்த சரீராதிகளை நானென்று எண்ணுகின்ற அறிவு எதனால் என்னை விட்டு ஒழியவில்லை. அது என்னைவிட்டு ஒழியாமல் இருக்கின்ற காரணத்தை இந்த அடியேன் பொருட்டு தேவரீர் மொழிந்தருளுவீர்.

கண்ணன் :—காண்டீபா ! வேதங்களில் சொல்லப்பட்டுள்ள உண்மைப் பொருள்களைக் கேட்டலினாலும், அப்படிக் கேட்ட பொருளை சிந்தித்துப் பார்ப்பதினாலும், நாளுக்கு நாள் அதிகரித்துச் செய்த தியானங்களினாலும், தனக்கு உண்மையான பிரஹ்மம் நான் என்ற அனுபவம் தோன்றியவுடன், இந்தத் தேகபுத்தியானது உன்னை விட்டு நீங்கி விடும்.

பார்த்திபன் :—கண்ணா ! ஆதியிலேயே ஆன்மவடிவமாக ஆகாத நான் இப்பொழுது கேள்வி, மனனாதிகளால் ஆகமுடியுமா ?

கண்ணன் :—காண்டீபா ! நீ இவ்வாறு மறந்து தேடுவதானது, தன்னுடைய கழுத்தில் இருக்கின்ற ஆபரணத்தைக் காணவில்லை. எங்குற்றதோ ? என்று தேடுவதற்கு சமானமாகும்.

பார்த்திபன் :—கண்ணா ! கேள்வி, மனனாதிகளாற் றேடிய பின்பு உடம்பு யானென்று எண்ணுகின்ற புத்தியானது கெட்டொழிந்து, உண்மையான சச்சிதானந்த சொருபத்தை நான் அடைவேனா ? அதைத் தாங்கள் என்னுடைய குறை என்னைவிட்டு நீங்கும் பொருட்டு பகர்ந்தருள வேண்டும். (தொடரும்)

வாக்கிறந்து நின்ற மனோகோச ரந்தனிலே
தாக்கறவே நின்றதிலே தலைசெய்தாய் நெஞ்சமே.

அறுமுகன் அடியவரே எம் உறவினர்; எங்கள் ஆன்மார்த்த விஷயம் இது; இதில் எவரும் குறுக்கிட வேண்டா என்று கண்டிப்பாகக் கூறினர் ஹரிஹரர்; எங்கள் நடையைத் தடை செய்ய வேண்டா என்று மரகதம்மையும் விநயமொடு கூறினர்.

இப்பதிலைக் கேட்ட குணநலம் சிறந்த வைதிகம், பராசல தம்பதிகளின் உலகியல் துறந்த உணர்வொழுக்கத்தை உணராது, உள்ளம் கொதித்தது.

ஆரம்பத்தில் சமபந்தி போஜனம் மறுக்கப் பெற்றது; சுபாசுபங்கட்குச் செய்தி அறிவிப்பதும் தடைப்பட்டது.

ஹரிஹரன் ஊரை ஏமாற்ற வேஷம் போடுகிறான் என்றார் ஒருவர். இல்லை இல்லை; உடையவன் மறுமணம் செய்யாதபடி, தடைபுரியச் செய்யும் மரகதத்தின் சூழ்ச்சி இது என்கிறார் ஒருவர். அஞ்சா நெஞ்சம் உள்ள இவர்கட்கு அறிவு கற்பிக்க வேண்டும் என்றார் ஒருவர். எப்படியாயினும் ஒழிந்து போகட்டும். நமக்கேன் அவர்களைப் பற்றிய சிந்தனை என்றார் ஒருவர். வைதிகத்தில் பழுதுவர உறவாடல், உணவு கொளல், சொன்னாலும் கேளாமை முதலியவைகளில், மீறிய இந்த இறுமாப்புக்கு இடம் கொடுப்பது ஆகாது என்று குதித்தார் ஒருவர்.

உலகியல் உறவு சிறிது சிறிதாக விலகலையும், அடியவர் உறவு வரவர வளர்தலையும் அறிந்து, தற்பர முருகன் அருள் நலம் நினைந்து மகிழ்கின்றார்கள் தம்பதிகள்.

பரம வைராக்கியம்

எம்பெருமான் ஆலயத்தில் ஒருநாள் இரவு வழிபாடு நடந்தது. அதுவரை அடியவர்களுடன் பாடி ஆடிப் பரமனை வழிபட்ட தம்பதிகள், வீடு திரும்பினர்.

தாம் இருக்கும் வீதியை அணுக அணுக, குய்யோ முறையோ என்ற கூக்குரல் கேட்டது. எங்கும் ஒரே அல்லோல கல்லோலம்! என்ன இது? ஆஹா! பராசல தம்பதிகளின்

சோதியான் றூம்பணிநீர் றூறைகொளு மாறேபோல்
நீதிகுரு வின்றிருத்தான் நீபெற்றாய் நெஞ்சமே.

வீடல்லவா பற்றி எரிகிறது! தீப் பிடித்தது எவ்விதம் என்பது, சிதம்பர ரகசியம். எதிர் வீடு பக்கத்து வீடுகளில் தீ பரவாதபடி, குடங் குடமாகத் தண்ணீர் கொட்டுகின்றனர் பலர். தம்பதிகள் இது கண்டு முதலில் திடுக்கிட்டனர். அடுத்து அமைதி அடைந்த வராய், குமர குகா என்றபடி, ஹரிஹரர் மனையாளை நோக்கினர். முருக முருகா! என்கிறார் மரகதம்மை.

பக்தி முற்றி விட்டது; வைதிகத்தைச் சிதைத்த பாவத் தால், இவன் வீட்டிற்கு இக்கதி என்றார் ஒருவர். அதைக் கேட் டதும், புன்னகை செய்தார் ஹரிஹரர்.

அந்த வீட்டுக்கு ஆசைப் பட்டோம்! இந்த வீட்டை விட்டு நம்மை வெளிப்படுத்துகின்றான் விமலன் என்ற கணவர்க்கு, உண்மை ஸ்வாமி! உண்மை என்றார் தேவியார். அதைத் தவிர இருவரில் எவரும் தீயணைக்கும் முயற்சியில் இறங்க வில்லை.

அன்று முதல் சமையல், படுக்கை எல்லாம் ஒரு சத்திரத் தில் ஆயது. அந்த ஆண்டு முழுதும் மழையின்மையால், நாடு பஞ்சத்தால் நலிந்தது. பசி தாங்காது மனம் பதறுகின்றார் பலர்.

இதை நினைத்து மனம் வருந்திய ஹரிஹரர், தன்னை நாடி வருபவருக்கு உதவ இயலாமல் தவித்தார். இருக்கும் நில புலன் களை வாங்குவார் இல்லாமையால், சொற்ப விலைக்கு விற்றார். கையிருப்பு உள்ளவரை அடியவர்களுக்கு உதவினார்.

இப்பொழுது கையில் ஒரு காசும் இல்லை; கடன் கொடுப்பார் யாரும் இல்லை என்ற நிலை பிறந்தது. தானும் பசி தாங்கவாற்றாது பிட்சை எடுத்தார்; பிறர்க்கும் இட்டார்; எஞ்சியவற்றை மனைவி யோடு தானும் உண்டார். வெற்றிவேல் இறைவனுக்கு அரோ ஹரா! விருது கூறும் சேவல் கொடி வெல்க! ஆறுமுகம் வாழ்க! தேவயானை மணாளன் வாழ்க! மயிலேறும பெருமான் வாழ்க என்று வாய் மலர்ந்து அழைத்து, மகிழ்ந்திருந்தனர் தம்பதிகள்.

வறுமையின் கோரதாண்டவம், பலரை வெறும் பேச்சு முகமான நாஸ்திகத்தில் உறவாடச் செய்தது; வரவீர கோவி

முத்திக்கு வித்தான மோனக் கரும்புவழி
தித்தித் திடவிளைந்த தேனே பராபரமே.

லுக்குப் போவாரையும் தடை செய்து விட்டது. உள்ளொழுக்கம் ஒழிந்தது; இது கண்டு குணநலம் சிறந்த பலர், திருப்பரங்குன்றத்தை விட்டு வேறு பதிகளில் குடியேற லாயினர்.

இப் பஞ்சம் காரணமாக, தனக்கும் பிட்சை அகப்படவில்லை, கோயிலாவது ஏதடா! குளங்களாவது ஏதடா என்ற பஜனை எங்கும் படர்ந்தது. எங்கும் கொள்ளை, கொலை, களவு, பொய் முதலியன கொடூர நிருத்தம் செய்து கொக்கரித்தன.

மரகதம்! நாடு இப்படி நலிகிறதே!

சுவாமி! ஆஸ்திகம் குறைந்த நாட்டில், தரித்திரம் தலையெடுப்பது இயற்கை; அமைதி குறைந்து எரிவு மிகுந்த காலத்தில், எங்கும் பஞ்சப்பாடு எழுவது இயல்பு.

மரகதம்! முழு உண்மை கூறினை! நாடு நலமுற, நாமேனும் முருகனிடம் முறையிடுதலே முறை; ஆறுமுகப் பரமன், ஆறுதல் தருவன்; பாரெங்கும் செவி படைத்த பரமன், நம் முறையீட்டை ஏற்பன்; என்ன சொல்கிறாய் என்றார் ஹரிஹரர்; நல்ல யோசனை என்றார் மாணிக்கமான மனைவியார்.

அதோ! திருப்பரங்குன்றத்தான் திருக்கோயிலை, இருவரும் வலம் வருவதைப் பாருங்கள்!

விண்ணுதி பூதமாய் விளங்குகின்ற விமலா! நாடு நலமுற அருள்! கருணை மழை பொழியும் கருணாகரா! பஞ்சம் தவிர அருட்கண் பார்! உள்ளங் குழைப்பாய்! உயிரை உருகச் செய்வாய்! அருட்கனலால், ஆன்மாவின் அறியாமை இருளை அழிப்பாய்! பசித்த பிள்ளை தாயிடம் பால் குடித்து மகிழும்; பேயிடம் சென்றால் செத்துத் தொலையும்; அதுபோல், அருளுருவக் குமரா! குமரி மணாளா! அறியாமை இருளில் அகப்பட்டு அவதியடையாதபடி, ஆன்மாக்கட்கு உண்மை ஞானம் உதவாயா! அது குறித்து, உயிருள்ள வரை உன் கோயிலை வலம் வருவம்; விளைவு யாதாயினும் ஆக என்று விண்ணப்பித்தார். தம் பொருட்டு அன்றி, ஆன்மாக்கள் நற்கதியடைய எண்ணும் உளத்தவர் மேலவர். அதற்குச் சிறந்த உதாரணமாக இருந்தனர்

நித்திரையும் பாழ்த்த நினைவும் அற்று நிற்பதுவோ
சுத்த அருள்நிலைநீ சொல்லாய் பராபரமே.

இத் தம்பதிகள். பரங்கிரியானுக்கு அரோகரா என்றார் ஹரிஹரர். ஞானசக்திக்கு அரோகரா என்றார் மரகதம் அம்மையார்.

காலால் வலம் வந்தார்கள் பலநாள்; நிலத்திற் படுத்து, உருண்டு உருண்டு, பரங்கிரியை வலம் வந்தார்கள் சில நாள்; கல் பொத்திற்று; முள் குத்தியது; மார்பு, முதுகெலாம் ரத்தம் பீறிட்டது. வாய் மட்டும் முருகா! குமரா! குகா! என்று முறையிடுகின்றது. தக்கவர் பலர் இச்செயலைத் தடுக்க முயன்றனர்.

வாய்மை, உண்மை, மெய்ம்மை எங்கும் மணக்க வேண்டும்; காலமழை பொழிந்து, வளம் நிறைந்து மக்கள் வாழ வேண்டும்; சித்தத்தில் சிவம் விளங்கி, உய்ய வேண்டும் இந்த உலகம்; அந்நிலை பிறக்கும்வரை, முருகன் ஆலயத்தின்முன் மறியல் செய்யும் எம்மைத் தடுக்கவேண்டாம் என்று பகர்ந்தனர் தம்பதிகள்.

இங்ஙனம் உணவின்றி, உறக்கமின்றி, இரவும் பகலும் உருளுவதே தொழிலாகி உடல் இளைத்தது. உள்ளம் அயர்ந்தது. ஒரு நாள் அந்தோ! இருவருடைய ஆன்மாவும் உமை குமரனை எண்ணியபடி உடலை விட்டு அகன்றது.

இது கண்டு வருந்திய ஊரவருள் சிறந்தவரான சிலர், இருவருடைய உடலையும் தகனம் செய்து சாந்தி கண்டனர். ஆஹா! அன்று இவர்கள்தம் பொருள் அழிந்தது; வீடு எரிந்தது; இன்று உடல் சாம்பல் ஆகியது; மெய்ம்மையர்க்குமோ இக்கதி என்று வருந்தி நைந்தனர் மேலவர். ஒழிந்ததே நலம் என்று அந் நிலையிலும் உறுத்து ஓதினர் உறவினர்.

அகால மரணமாதலின், இரு ஆன்மாக்களும் நுண்ணுடல் பெற்று, ஆயுள்காலம் தீரும்வரை வள்ளி மணாளன் ஆலயத்தை வலம் வந்து கொண்டிருந்தன.

அவைதிகன் ஒருவன், காலமேல் கால் இட்டு, ஆலய வாயிலில் அமர்ந்தான்; அங்ஙனம் அவனிருந்தது, ஒரு கணநேரந்தான்!

யாரடா அவன்? ஆண்டவன் சந்நிதியில், மரியாதை தெரியாமல், கால் மேல் கால்; சீ எழுந்திரு!

மண்ணும் மறிகடலும் மற்றுளவும் எல்லாம்உன்
கண்ணில் இருக்கவும்நான் கண்டேன் பராபரமே.

இந்த அதிர் குரல் இருதரம் எழுந்தது. அவைதிகன் அஞ்சி எழுந்தான். சுற்றும் முற்றும் நோக்கினன்; ஒருவரும் இல்லை. உடல் பதைத்தது. ஓடமுயன்றான்.

ஓடாதே! வலம் வந்து இறைவனை வணங்கிச் செல் என்று எழுந்தது மீட்டும் ஒரு குரல். நடுங்கியது உடல்.

ஆறுமுக ஐயா! பயமாய் இருக்கிறதே! அறிவிலாதேன்; பெரும்பிழை செய்தேன்; மன்னிக்க வேணும்!

குறை ஒன்றும் நேராது! குமரனைக் கும்பிடு என்றது குரல்.

அப்படியே என்று வலம் வந்து வணங்கும் அவன் வாய், முருகா குமரா! குகா என்றது. அதன்பின் வீடு திரும்பினன் அவன்.

இச் செய்தியை இவன் மூலமாய் அறிந்த திருப்பரங்குன்ற மக்கள் திகைத்தனர்.

நாத்தழும்பேற நாத்திகம் பேசும் ஒருவன், இதை கட்டுக் கதை என்றுகனத்தகுரல் எழுப்பினன். அத்துடன், நானே போகிறேன்! விஸ்வகர்மன் சிருஷ்டித்த கோயில் தெய்வம், என்முன் குறுக்கிடுகின்றதா பார்க்கிறேன் என்று பெருமிதத்தொடு பேசினன். பிறகு எவரும் காணப் புறப்பட்டான்.

மூணைப்பொடு காலில் செருப்பு; வாயில் இட்ட தம்பலத்துடன் இறுமாந்து சென்றான். ஆலய வாயிலை அடைந்தான்.

ஏடா! கால்செருப்பே! தம்பலத் துப்பே! அகத்தாலும் புறத்தாலும் ஒழுக்கம் உடையவர்க்கே உமைகுமரன் கோயில் செல்லும் உரிமை; திரும்பிச் சென்று, வாய்மை உளத்தினனாய் வா! உயிர்பிழைக்க வேண்டும் என்ற எண்ணம் இருந்தால், நான் சொன்னபடி செய் என்றது அசரீரி.

அகங்காரத்தோடு வந்த நாஸ்திகன், அஞ்சி அங்கிருந்து அகன்றான். வீட்டை யடைந்தான். எவரிடமும் இது குறித்து வாய்திறக்கவில்லை. பாயில் படுத்தான்; கணநேரத்தில் கண்ணயர்ந்தான். அதிர்கிறது நிலம்; ஆடுகிறது அவன் உடல்.

பூட்டிவைத்து வஞ்சப் பொறிவழியே என்றனைநீ
ஆட்டுகின்ற தேதோ அறியேன் பராபரமே.

எழுந்திரடா எழுந்திரு! ஆறுமுகத்தைச் சேவித்து அமைதிகொள் என்ற குரல், கனவில்கேட்பது போல் இருந்தது. உடனே கண்விழித்தான். அஞ்சியது நெஞ்சம்; நீராடினன். நீறு தேடி யணிந்தான். மனை மக்களுக்கும் செய்தி கூறினன்; ஏதமுறும் அவர்களோடு கோயிலை எய்தினன். பயத்தொடு வழிபட்டான். அன்றுமுதல் ஆறுமுக பக்தனானன். அவனால் நாஸ்திகப் பிரசாரம் நைந்தது; ஆஸ்திகப் பிரசாரம் அதிகரித்தது

பொழுதுபோக்கு என்று, உள்ளன்பு இல்லாமல், வேல் பெருமான் கோயிற்கு வந்தாரையும், தெய்வ சிந்தனை இன்றி, பொருள் தேடல்; போக வாழ்வு; இதற்கு அயலாய் ஒன்றுமே உணராத ஏழைப் பிரபுக்களாக இருந்தாரையும், அணுகியது அவ்வொலி.

பேச வாய் தந்தவன் பெரும் பெயர் முருகன்; காணக் கண் தந்தவன் கந்தப்பெருமான்; கையும் காலும் தந்தவன் கருணை விசாகன்; வாழ்க்கையில் அமைதிக்கு வழி, செவ்வேள் தாண்மலர் எண்ணுதல்; மறவாதே; புறப்படு! அருளொளி பரப்பும் மயிலேறி, அறிவொளி மலர்த்தும் வேல் ஏந்தும் சேந்தன் சந்நிதியில் சேர்! விலங்கிருப்பது குகையில்; பறவை யிருப்பது கூட்டில்; இங்ஙனம் நீயும் இல்லத்தில் அடங்கி இருப்பதோ? சீ! அவைகளோ அலைமோதா மனத்தன; உன் மனத்துடிப்பு ஐயோ! பேதையே! நினைத்தாலும் மனம் வெடித்துவிடும் போல் இருக்கிறதே! நாடு நலமடைய, நீ புனிதமுற, போ! போ! முருகன் கோயிலுக்குப் போ என்று உறுத்து அதட்டி உரைத்து, தெய்வ சிந்தனையை உண்டாக்கியது அந்தக் குரல்.

ஆண்களிடத்தில் ஆண்குரல்; பெண்களிடத்தில் பெண்குரல். அதன்பின், பயம்கொண்ட பரங்கிரி மக்கள் எவரும் ஆறுமுகன் திருக்கோயிலை யடைந்தனர்; பயத்துடன் வழிபட்டார்கள். பயம் பக்தியாயது; பக்தி காதலை வளர்த்தது.

இந்த அதிசயத்தைத் தண் தமிழ்நாட்டு மக்கள் அனைவரும் கேள்வியுற்றனர். அகத் தூய்மையுடன் ஆயிரம் ஆயிரமான

பொய்யுணர்வா யிந்தப் புழுக்கூட்டைக் காத்திருந்தேன்
உய்யும் வகையும் உளதோ பராபரமே.

அன்பர்கள், திருப்பரங்கிரியில் திரண்டு வந்தனர்; அமலனை ஆர்வத்துடன் உள்ளம் உருகி வழிபடலாயினர்.

அன்பு மேகங்கள் எங்கும் குமுறின. அருள் மழை காலூன்றிப் பொழிந்தது. ஓம் பொருள் இதய நிலத்தில் விளைந்தது உலகம் அமைதி அடைந்தது. இந்நிலையில், வான் மழை பொழிந்தது; வளம்பல நிறைந்து வாழ்ந்தது தமிழகம்.

ஒரு நாள் திருப்பரங்குன்றத்திலுள்ள உயர்ந்த அன்பர்கள் கனவில், தேவயானை மணாளன் நிமல புன்னகை செய்து நின்றான். என் அன்பர்களான ஹரிஹரனும், மரகதமும், பூத யாக்கை நீத்து சூக்கும தேகத்திலிருந்து, எம்மை வழிபடும் முறையை எவர்க்கும் உணர்த்தினர். அவர்கள் மூலம், உயிர்கட்கு வாழும் வழி உணர்த்த, இத்துணைநாள் வாளா இருந்தேம்! அப் புனித பக்தர்கள் இருவரும், நுண் உடல் நீங்கி, இன்று எம் பொன்னடி எய்தினர் என்று அறிவித்தனன்; ஆநந்தாதிசயமான அற்புத கனவு கலைந்தது.

விழித்தெழுந்த பக்தர்கள், விண்ணவர்க்கு உய்தி தந்த ஞான விண்ணும் சரவணபவன் அருளை நினைந்து அழுதனர். பராசல தம்பதிகளின் தவப் பெருமையை, எங்கும் பறை அறைந்தனர். அவர்கள் மூலமாக செய்தி அறிந்து அகமகிழ்ந்த தமிழகம், அன்றும் இன்றும் இவ் வரலாற்றை எண்ணி இன்புறுகின்றது. பருவுடலி லிருந்தும், நுண்ணுடலி லிருந்தும் அரும்பாடு பட்டு ஆன்ம உய்திக்கு வழிசெய்த மேலவர்கள் இப்படி யெத்துணை பேரிருந்தனரோ; அறிபவர்கள் யார்? ஓம்.

கட்டுரை :—

உள்ளத் தூய்மை

அ. ராமமூர்த்தி,

ஒரு மனிதனுடைய உயர்வும் தாழ்வும் அவனுடைய உள்ளத்தைப் பொறுத்தது. உள்ளத்தில் களங்கமில்லாத

கன்னங் கரியநிறக் காமாதி ராட்சசப்பேய்க்
கென்னையிலக் காகவைத்த தென்னே பராபரமே.

வனே வாழ்க்கையில் உயர முடியும். தற்கால நாகரிக உலகம் மனிதனுடைய உள்ளத்திற்கு ஒரு பெரும் சோதனைக் கூடமாகவே விளங்குகிறது என்று கூறலாம். அன்ருட வாழ்க்கையில் மனிதனுக்குக் கிடைக்கும் ஒவ்வொரு சந்தர்ப்பமும், அவனை உயர்த்துவதையே நோக்கமாகக் கொண்டவைதான். ஆனல் மனிதன் உயர்வதில்லை. காரணம் என்ன? உயரக் கூடிய அளவுக்கு அவனுடைய உள்ளம் பண்படவில்லை. சிந்தனை செய்வதற்குக் கூட நேரமில்லாதவாறு அவனுடைய வாழ்க்கை யந்திர வேகத்தில் ஓடுவதால், தன்னுடைய உள்ளத்தின் வளர்ச்சியை அறிய அவன் சாதாரணமாக எங்கே முயலப் போகிருன்?

வாழவேண்டும் என்று ஆசைப்படுகிருன். ஆனல் உண்மையில் வாழ்கிருனு? வாழ்க்கை மலர்ச்சி பெற பண்பாடு வேண்டும். பண்பாடு என்பது உள்ளத்தில் தோன்ற வேண்டிய ஒன்று. உள்ளம் பண்பட அது தூய்மைபெற வேண்டும். வாசனுப் பழக்கத்தால் அதன் மீது படிந்திருக்கும் மாசு அகல வேண்டும்.

உற்று நோக்கும் போது சிந்தனை தொழில் புரிகிறது. ஆராய்வு மனப்பான்மை தோன்றுகிறது. பிரச்னைகள் அலசப் படுகின்றன. உள்ளமும் செயல் படுகிறது. உள்ளம் உள்ளத்தால் செயல்படும் பொழுது அது உண்மையைத்தான் நாடும். உள்ளம் உண்மை யுருவெடுக்கும் போது அது தூய்மை பெற்று விளங்குகிறது. மனிதனுக்குப் பண்பட்ட வாழ்க்கையைக் கொடுக்கிறது. "உள்ளத்தால் பொய்யாது ஒழுகின் உலகத்தார் உள்ளத்துள் எல்லாம் உளன்" என்ற வள்ளுவரின் வாக்கு இங்கு குறிப்பிடத் தக்கது.

உள்ளத் தூய்மைக்கும் பயிற்சி வேண்டும். அப் பயிற்சி நமது தினசரி வாழ்க்கையிலிருந்தே நமக்குக்

தன்மயமாய் நின்றநிலை தானேதா னுகிஒன்ருய்
நின்மயமாய் எல்லாம் நிகழும் பராபரமே.

கிடைக்கிறது. படைப்பின் ரகசியங்கள், காத்தலின் அவசியம், சம்ஹாரத்தின் தத்துவம் இவை எல்லாவற்றையும் வாழ்க்கை நமக்குப் போதிக்கிறது. எல்லாம் இறைவன் மயமே என்ற உண்மையை நாம் முதலில் உணர்ந்து விட்டால், எல்லாவற்றையும் தத்துவக் கண்ணோட்டத்துடன் நோக்குவது, சிந்திப்பது, முடிவுக்கு வருவது என்ற பழக்கம் நமக்கு ஏற்பட்டு விடும்; இப்பழக்கம் உள்ளத் தூய்மையை நம்முள் வளர்க்கும்.

திசை காட்டும் கருவியில் காந்தக்கல் எப்போதும் வட திசையையே காட்டுகிறது. அதைப் போலவே எந்த மனிதனுடைய மனசாட்சி என்ற காந்தக் கல்லும், எப்போதும் சரியான வழியையே—உண்மை விளக்கத்தையே காட்டும். எவ்வளவு கடின சித்தம் படைத்தவனாயினும், கொலைகாரனாயினும், அவனுடைய மன சாட்சியோடு ஆரம்பத்தில் ஒரு பெரிய போராட்டம் நடத்திய பிறகே தன் செயலில் இறங்குகிறானென்பது அனைவரும் அறிந்ததே. இந்த மனச் சாட்சி தான் உள்ளத் தூய்மைக்கு வழி காட்டி. இது கூறுகிறபடி மட்டும் ஒவ்வொரு மனிதனும் நடந்து கொள்வது என்று தீர்மானித்து விட்டால், உள்ளத் தூய்மைக்கென தனிப் பயிற்சி தேவையில்லை!

உள்ளத் தூய்மை இல்லாதவர்கள்தான் வாழ்க்கையை ஒரு சுமையாகவோ, அல்லது இன்றியமையாத ஒன்றாகவோ கருதுவர். சாதாரண விஷயங்களும் அவர்களுக்குப் பெரிய பிரச்னைகளாகத் தோற்ற மளிக்கும்.

சில சமயங்களில் மன சாட்சியின் கட்டளையையும் மீறி, உள்ளம் தவறான பாதையில் திரும்புவதும் உண்டு. ஏனென்றால் மனிதன் தவறுவதற்கான சந்தர்ப்பங்களும் சூழ்நிலைகளும் இன்றைய உலகில் ஏராளம். அம்மாதிரி

ஏங்கி இடையும் நெஞ்ச ஏழையைநீ வாவென்றே
பாங்குபெறச் செய்வதுன்மேற் பாரம் பராபரமே.

யான சமயங்களில் சிறிது நேரம் மௌனமாகத் தியானத்தில் ஈடு பட்டு விட்டால் போதும். உள்ளம் தூய்மையை நோக்கித் திரும்பி விடும். சும்மாயிருக்கின்ற சுகப் பயிற்சியும் கிடைக்கும்.

வாழவேண்டும் என்ற எண்ணம் எல்லோருக்கும் உண்டு. ஆனால் "எப்படி வாழ்வது?" என்பது தான் பிரச்னை. "உள்ளத் தூய்மையோடு" என்பது தான் முடிவான பதில்.

சிவமயம்

கடவுளைக் காண முடியுமா?

வா. ராமலிங்கம் பிள்ளை, பேட்டை

உலகிற் சாராசரங்கள் அனைத்தும் தோன்றி நின்று அழியச் செய்யும் ஒப்பற்ற வலிமையுடைய தனிப்பொருள் ஒன்று உண்டு. அதுதான் கடவுள் என்று கொள்பவர் ஆஸ்திகர். அத்தகையதொன் றில்லையென்றும், எல்லாம் தோன்றுவதும் நிலவுவதும் அழிவதுமே இயற்கை என்பவர் நாஸ்திகர். ஆஸ்திகத்தை கடைப் பிடித்தொழுகுவதற்குக் காரண காரியத்தைப் பகுத்துணரும் பண்பு அவசியம். கடவுளில்லை யென்னும் நாஸ்திகக் கூற்றுக்கு முயற்சியே அவசியமில்லை.

எவையும் இயக்கும் சக்தி யுடைய ஒரு பொருளின்றித் தாமே இயங்காவாம்.

" ஒருவனே டொருத்தி யுண்டென் றுரைத்திடும் உலகமெல்லாம்
வருமுறை வந்து நின்று போவதும் ஆதலாலே
தருபவன் ஒருவன் வேண்டும் தான்முதல் ஈறுமாகி
மருவிடும் அநாதி முத்த சித்துரு மன்னி நின்றே"

என்ற பாடலையும்,

"சந்திர, சூரியர், உடு, அந்தரமதில் எந்நாளும் தத்த முறை வழுவாது கொட்புறுதலாலும், கந்தரம் வாரியின்

உள்ள துணரா உணர்விலிமா பாவியென்றே
மெள்ளமெள்ளக் கைநெகிழ விட்டாய் பராபரமே.

மொண்டே கழிதருதலானும், கடல் தன் எல்லையை மீறிக் கடவாமையானும், மந்திரத்தாற் பாம்பாதி வசமாகையாலும்"

கடவுள் ஒருவர் உண்டு என்றுணரத்தகும் என்பது முன்னோர் முடிவு.

இதனை உற்றுணரின் யாவற்றையும் இயக்கி நடத்தும் தனிப் பொருள் ஒன்றுண்டு; அதுவே கடவுள் என்பது புலனாகும்.

உலகத் தோற்றம் மற்றவு எல்லாம் இயற்கையே என்பர் பிறர். நம் முன்னோர் அவ்வியற்கையையே கடவுள் எனக் குறிக்கின்றனர்.

"என்னன் என்மனை எந்தை என்னருயிர்
தன்னன் தன்னடி யோம்தன மாகிய
பொன்னன் புரிசடைப் பூவனூர்ப் புண்ணியன்
இன்னன் என்றறி யொண்ணன் இயற்கையே

(திருநாவுக்கரசு சுவாமிகள்)

இயற்கையாகியும், ஐம்பெரும் பூதம், இரு சுடர், ஆன்மா வாகியும், இவ்வெட்டுரு வின்றித் தனி யுருவ மில்லாது உடனாயும், வேறாயுமுள்ள ஒளி மயமான பொருளைக் காட்ட முடியுமா? முடியாது. அதனால் அத்தகைய தொன்றில்லை யென்று எளிதில் கூறி மகிழ்கின்றனர், மக்கட் பண்புக்காம் விநய மில்லாத மாந்தர்.

ஒரு உருவப் பொருளைக் காண்பதற்கே, கதிரவன் ஒளியும் கண்ணொளியும் ஒருங்கு பொருந்தாத போது பயனில்லை. கதிரவன் ஒளியிருந்து கண் ஒளியில்லையாயினும், கண்ணொளி மட்டு மிருந்து கதிரவனொளி இல்லையானாலும் காண முடியாது. கண்ணொளியில் குற்றப்பாடான நோயிருந்தால், கதிரவனொளி நன்றே யிருப்பினும் அதனை உள்ளவாறறிய முடியாமல், நோய்க்கேற்ப வேறுபாடாகவே காணலாகும். இப்படி யிருக்க எல்லாமாய் அல்லதுமாய் யாவற்றிலும் வியாபகமாய் நிற்கும் தனிப் பொருளை, மயக்க மாகிய நோய் பொருந்திய ஊனக்

தேகம்யா தேனுமொரு சித்திபெறச் சீவன்முத்தி
ஆகுநெறி நல்லநெறி ஐயா பராபரமே.

கண்ணை யுடையவன் காட்டும்படி கேட்பதால் பயனென்! "செந்திருவைப் போலணங்கைச் சிங்காரித் தென்னபயன், அந்தகனே நாயகனானால்" என்றபடியாம்.

இக் கூற்றால் ஆஸ்திக மக்கள் அவலமுறுத லாகாது. கடவுளைக் காணவும், உறவாடவும், உடன் ஒன்றுதலாகிய ஒப்பற்ற நிலையை எய்தவும், இம் மக்கட் பிறப்பினால் மட்டுமே கூடும். ஏனைய தேவர்கள்தம்மாலும் ஆகாது என்று நமக்கு முன்னோர் அருள் நெறியால் அருளினர். செந்நெறியாம் அந்நெறி பற்றி, பொறி புலன் வழிசென்று மயங்கும் புன்மை தவிர்ந்து நின்றால் இறைவனை அடைதல் எளிதாகும். இறைவனை அடைதல் என்பது நாம் தேடிச் சென்று அவனை அடைதல் அன்று. ஒப்பற்ற பரம் பொருளாம் அவனே நெறி நிற்கும் பெற்றியர்பால் தானே வந்து, ஐம்புலக் கட்டில் பட்டுழலும் தன்மையை நீக்கித் "தலையளித்தாட் கொண்டருளுவான்." கட்புலனுக்கு வாராத கடவுள், "விறகிற் றீயினன் பாலிற் படு நெய் போல், மறைய நின்றுளன்"; ஆனால் அவன் மாமணிச் சோதியான்"; எப்படிக் காணலாம்? உறவுகோல் நட்டு உணர்வு கயிற்றினால் முறுக வாங்கிக் கடைய முன்னிற்குமே" என்பது ஆளுடையார் அருள் வாக்கு. அவன் நின்மலன் நிர்க்குணன்; பிறப்பிறப்பாதி யுயிர்க் குணமில்லாத பெருமையன்; யாவர்க்கு மில்லா எண் குணத்தவன்.

பிறவிக் கடலில் விழுந்து, "பெரு நோய்கள் மிக நலியப் பெயர்த்தும் செத்துப், பிறப்பதற்கே தொழிலாகும்" தன்மை யுடையார் காண வொண்ணா மணி கண்டன்; "பொறி புலன்களைப் போக்கறுத்து உள்ளத்தை நெறிப்படுத்து நினைப்பவர் நெஞ்சுளே அளிப்புறும் அமுதாயவன்." "புன் புலால் யாக்கை புரைபுரை கனியப் பொன்னெடுங் கோயிலாப் புகுந்தென், என்பெலாம் உருக்கி எளியனை யாண்ட ஈசனே" எனபது அமுதடியடைந்த அன்பர் அமுத வாக்கு. "அனைத்துலகுமாய, நின்னை ஐம்புலன்கள் காண்கிலா;" காணலாம் பரமே

பரம்பரப் பரவெளியாப் பார்ப்பதல்லால் மற்றெவர்க்குந்
திரமேது மில்லைநன்ருய்த் தேர்ந்தேன் பராபரமே.

கட்கிறந்ததோர் வாணிலாப் பொருளே என்பதும் அன்னார் நல் வாக்கேயாம். இனி இதனை எய்தப் பெறுதவர் காணுந் தகையவர் அல்லர். ஏனெனில், "ஊனக்கண் பாசம் உணராப்பதி யாகலானும், ஞானக்கண்ணினில் சிந்தைநாடி, உராத்துனைத் தேர்த்தென பாசம் ஒருவ தண்ணிழலாம் பதி" ஆகலானும் என்க. சேக்கிழார் சுவாமிகளும், "புரமூன்றும் செற்றானைப் பூணாகம் அணிந்தானைக்; கரணங்கள் காணுமல் கண்ணார்ந்து நிறைந்தானை" என்று கூறினமையும், "குறிகளும் அடையாளமும் கோயிலும் நெறிகளும் நின்றதோர் நேர்மையும், அறிய ஆயிரம் ஆரணம் ஓதினும், பொறியிலீர் மனம் என்கொல் புகாததே" என்று அப்பர் சுவாமிகள் அருளினமையும் உணரற் பாலன. அப்பர் சுவாமிகள் "தேடிக் கண்டு கொண்டேன் திருமாலொடு நான் முகனும், தேடியுந் தேடொணாத் தேவனை என்னுள்ளே தேடிக் கண்டு கொண்டேன்" என்றும்,

"சிவனெனும் நாமம் தனக்கே யுடைய செம்மேனி யெம்மான்
அவனெனை யாட்கொண் டளித்திடு மாகில் அவன்றனை நான்
பவனெனும் நாமம் படித்துத் திரிந்து பன்னு ளழைத்தால்
இவனெனைப் பன்னு ளழைப்பொழி யானென் றெதிர்ப்படுமே"

என்றும் அருளினமையும் இனிதுணரற் பாலது. அவனருளே கண்ணகக் காண வேண்டும். அவனால் காட்டப் பெறும் பொழுதே காணலாம் அன்றிக் கருமல் மறைப்பால் மயக்கமுற்று நிற்கும் நிலையில் காண முடியாது. ஓட்டற்று நிறைவுணர்வு பதி முட்டித் தேட்டற்று நின்ற இடம் சிவமாம்—நாட்டுற்று, நாடு மிடமெல்லாம் நாளு விதமாகத், தேடு மிடமன்று சிவம். நெறி நின்றாலே காண முடியும்; எனவே,

"மனமொழிந்து காம மயக்கொழிந்து மாருச்
சினமொழிந்து வாதனையுந் தேய்ந்தால்—இனிய
குருக்களாய் வந்தமையக் கொண்டுவீ டுய்க்கும்
திருக்களா வாழும் சிவம்"

எத்தனையோ தேர்ந்தாலும் என்னாலே இன்பமுண்டோ
சித்துருவே இன்பச் சிவமே பராபரமே.

மதிப்புரை

பெரும்பெயர் முருகன்: கலைமகளாசிரியர். கி. வா. ஜகந்நாதையர் எழுதியது; கிடைக்குமிடம்:— அமுத நிலையம் லிமிடெட், தேனாம்பேட்டை, மவுண்ட்ரோட், சென்னை-18. விலை 3—0—0.

அமுதினு மினிக்கும் அருந்தமி ழன்னையின் இந்நாள் தலைசிறந்த மக்களுள் ஒருவர், கி.வா.ஜ. அவர், பல மலர்களி லிருந்து தேனைத் தொகுக்கும் வண்டுபோல், தொல்காப்பி யம், குறுந்தொகை, பரிபாடல், திருமுருகாற்றுப்படை, தக்கயாகப் பரணி, திருப்புகழ், கந்தரலங்காரம், கந்தரநு பூதி, பிள்ளைத் தமிழ்கள், கந்தபுராணம், திருவிளையாடல் புராணம் முதலிய பல நூற்களிலிருந்து பெரும்பெயர் முருகனை, நம் உள்ளம் காணுமாறு இந்நூலில் உருவாக்கித் தருகின்றார். வடநாட்டு ஆடவர் மட்டும் வழிபடும கார்த்திகேயனை, தென்னாட்டில இருபாலரும் இறைஞ்சும் விதம் இது என்று கி. வா. ஜ. கூறும் ஒவ்வொரு பகுதி யும் நம் உள்ளத்தைத் தொடுகின்றன. பம்பாயில் திரு மால், பார்வதி மலையில் கார்த்திகேயன், வங்காளத்தில் ஸ்ரீ ராமகிருஷ்ண பரம ஹம்சர் கூறிய கார்த்திகேயன் வரலாறு முதலிய கட்டுரைகள் படிக்கத் தக்கன. தென் னாட்டில் ஒழுக்கத்தால் உயர்ந்தோரும் இழிந்த குறவரும் வழிபட, அவர்கள்தம் உள்ளப் பண்பு கண்டு உவந்து அருள வரும் முருகன் அருளாடல் உணரத்தகும். இருப் பவல எனும் 17-ஆம் கட்டுரை, மயங்க வைத்த ஒரு திருப் புகழ்க்கு விளக்கம் தருகின்றது. ஞானசம்பந்தர் முரு கனா அல்லவா எனும கேள்விக்கு விடை கூறும் கட்டுரை

யும், தூசாமணியும் த்கிலும் எனும் அநுபூதிப் பாடலில் பாட பேதம் காட்டும் செய்தியும் அறிஞர்கள் ஆய்விற்கு உரியன. 'நின்பால் யாம் இரப்பவை - பொருளும் பொன்னும் போகமுமல்ல - அருளும் அன்பும் அறனும் மூன்றும் - உருளிணர்க் கடம்பின் ஒலிதாரோயே' எனும் பழைய பிரார்த்தனையை நினைவுறுத்தி, 'அருள் என்னும் பொருளும், அன்பென்னும் பொன்னும், அறமென்னும் போகமும் வேண்டுகின்றார் புலவர்; அருளல்லாத மருளும், அன்பல்லாத பகைமையும், அறமல்லாத மறமும் அசுர லோகம்; அருளும், அன்பும், அறமும் தெய்வீகப் பண்புகள்; மனிதன் இம் மூன்றையும் பெற்றால், தெய்வமாகிவிடுகிறான்' என்று விளக்கம் கூறி, பழைய உரையை நினைவுறுத்தும் பகுதி கோடி பெறும். கல்லு முருகும் எனும் கடைசிக் கட்டுரையில் காட்டியபடி, நக்கீரர், நல்லந்துவனார், நல்லழிசியார் முதலிய ஆன்றோர் நூற்களில் உறவு கொண்டால், மனமாகிய பாறை நெகிழாமல் தீராது திண்ணம். எவ்வகையாலும் பாராட்டற்குரிய பெருப்பெயர் முருகன் பெருமையைத் தொகுத்துக் கூறும் இந்நூல், அனைவர் கரத்தும் அஸ்த பூஷணமாக இருப்பது நலம் தரும்; கி. வா. ஜ. அவர்களை இடையறாமல் இத்தகைய நூற்களை எழுதும் முயற்சியில் ஈடுபடுத்தும் அமுத நிலையத்தாரின் முயற்சிகளை மனமுவந்து பாராட்டுகிறோம்.

திருப்புகழ் உரை:— உரையாசிரியர் ராவ்பகதூர் தணிகைமணி. வ. சு. செங்கல்வராய பிள்ளை, M. A. கிடைக்குமிடம்:— ஸ்ரீமதி மீனாட்சி கலியாணசுந்தரம்;

No 2. இரண்டாந்தெரு, வடக்குக் கோபாலபுரம், சென்னை-6. விலை தனிச் சஞ்சிகை 1-0-0; இதுவரை பல சஞ்சிகை வெளிவந்திருக்கின்றன.

பல காலமாக முயன்று, ஓட்டுச் சுவடிகளைத் தேடித் தொகுத்து ஸ்ரீ அருணகிரிநாதர் திருப்புகழை வெளியிட்ட பெருமை, ஸ்ரீ செங்கல்வராயப் பிள்ளை அவர்கள் குடும்பத்திற்கு உரியது. அவர்கள் இன்று சந்தமணம் கொழிக்கும் செந்தமிழ்த் திருப்புகழ்க்கு உரை யெழுதும் முயற்சியில் ஈடுபட்டிருக்கின்றார்கள். காலப் போக்கிற்குத் தக்கபடி மனம் போக்கி எழுதுவார் போலன்றி, பழமை பற்றும் பண்புடைய அன்பர் அறிஞர் தணிகைமணி உரையாசிரியாக அமைந்தமை பாராட்டத்தகும். மாதந்திற் கொரு சஞ்சிகையாக உரை முழுவதும் அச்சிடும் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கும் பிரம ஸ்ரீ மீனாட்சி கலியாணசுந்தரம் ஐயரவர்கள் முயற்சி, தமிழர் ஒவ்வொருவரும் போற்றுவதற்கு உரியது. நம் மதிப்பிற்குரிய உரையாசிரியரும், பதிப்பாசிரியரும் ஏற்றுக்கொண்டிருக்கும் பொறுப்பு மகத்தானது. பெரும் பொருட் செலவில் இது வரை மூன்று படை வீடுகளின் உரை முடிந்து, நான்காம படை வீடு ஆரம்பமாகி யுளது. பொருள் உணர்ந்து ஓதுதல் பெரும் பயனு மாதலின், முருகன் அடியவர்கள், இந்த நல்ல சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டுகிறோம்.

Life Storms.

Human life is a sensitive ocean :
It swells in size as huge as a mountain;
It shrinks within as little as a tiny pot
The might of life is the ecstacy of being;

The Lord Himself rests on its even bed of
Ananda;
Life is a glory - an even sheet, where it has
banished all care;
All the lives on earth are but ripples of
Divine joy.
Depression is a vice, a disease, a distemper;
The stealing demon that hails from hell;
The godly forces rush to quench its fire;
Depression deadens action, it benumbs the
heart;
It seeks to encompass all in a living death;
The might of the soul - the angels of peace
Declare war on this the demon of hell;
In the dire conflict, the elements also join;
The ferocious wind, the driving hail, the
moving clouds in serried ranks;
The downpour of their interminable missiles
Floods the Earth and destroys all kinds of
egotistic formations.
In the tempestuous clash of arms the demon
Is killed and life is restored to its joy of
evenness;

These storms stand banished from the minds of the great souls that are self - established: for in the barometer of their minds, no depression is every formed. There is no room there for the trespassing thief. But little minds may lose all their tiny possessions in the war for peace, but they still emerge as gallant soldiers in a holy fight and their scars but proclaim the glory of Swarajya - the Kingdom of the Atman.

(***Thiruppugal Mani***)

துருத்திச் சுடரே! நெய்த்தானத்தாய்! சொல்லாய் கல்லாலா!
பருத்தி நியமத்து உறைவாய்! வெயிலாய்ப் பலவாய்க் காற்றானாய்!
திருத்தித் திருத்திவந்து என் சிந்தை யிடம்கொள் கயிலாயா!
அருத்தித்து உன்னை அடைந்தார் வினைகள் அகல அருளாயே.

— சுந்தரர்.

KASHMIR-KUSUM
ADD TO YOUR TOILET-OIL FOR HAIR PROTECTION & GROWTH
PREMALEELA
HIGH CLASS MYSORE AGAR BATHIES
Unicorn HONEY
NATURAL & PURE
SANTALUX
FOR CUTS, BURNS, RASHES, ITCH, PIMPLES ETC.
NANJANGUD TOOTH-POWDER
FACTORY'S
RENOWNED AYURVEDIC MEDICINES.

நம்பிக்கையுற்ற
நஞ்சன்கூடு மருந்துகள்
காஸ்மஸ்
கஸ்தூரி மாத்திரை
பாலக்ஸ்
பேதியாக மாத்திரை
நஞ்சன்கூடு பல்பொடி

காஷ்மீர் குஸும்
கூந்தல் செழிப்புக்கு
ஸான்டலக்ஸ்
சரும உபாதைகளுக்கு
பிரேமலீலா
சிறந்த மைசூர் ஊதுவத்திகள்
நஞ்சன்கூடு பல்பொடி
பாக்டெரியின் சிறந்த மருந்துகள்.

புனேடெட் கன்ஸர்ன் - 54, பந்தர் தெரு, சென்னை-1

நம்பிக்கைக்கும் நாணயத்திற்கும் உங்கள் நன்மதிப்புபெற்ற
நகை வியாபாரிகள்

"ஸ்வர்ண மாளிகை"

A. S. S. M. சோமசுந்தர செட்டியார் & Co.,
தங்கநகைகள், வெள்ளிப் பாத்திரங்கள் வியாபாரம்
124, தெற்காவணி மூல வீதி - மதுரை.
Tel :—"FAITH' Estd :—1924 Phone :—118

வியாபாரக்குறி
N. K. M.
தங்கநாடா



நம் நாட்டுத் தொழில்களில்
சிறப்புவாய்ந்த கைத்தறியால்
சிறந்த நூதன முறைகளில்
தயாரிக்கப்பட்ட
பட்டு, நூல் ஜவுளிகளுக்கு
நம்பிக்கையான இடம்.

கருப்பண முதலியார் ஸ்டோர்ஸ்
மொத்தம் அண்டு சில்லரை வியாபாரம்,
53. கிடங்குத் தெரு, மதராஸ் 1.

Printed by K. V. Jagannathan at the National Art Press
91, Mount Road, Madras—18
Edited & Published by S. Muthuswami, 54, Bunder St, Madras.